தினமணி

# பி.டி. கத்தரிக்கு அனுமதி இல்லை: மத்திய அரசு அதிரடி முடிவு

First Published : 10 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 10 Feb 2010 05:21:44 AM IST



புது தில்லி, பிப்.9: மரபணு மாற்றம் செய்யப்பட்ட பி.டி. கத்தரிக்காயை வர்த்த ரீதியில் பயிரிடுவதற்கு மத்திய அரசு அனுமதி மறுத்துள்ளது.

பி.டி. கத்தரிக்காய்க்கு பல்வேறு மாநிலங்கள், தன்னார்வ அமைப்புகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கவே அரசு இத்தகைய முடிவை எடுத்துள்ளது.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயைப் பயிரிடுவது தொடர்பாக விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. பி.டி. கத்தரிக்காய் தொடர்பாக மேலும் ஆய்வுகள் செய்யப்பட வேண்டியிருப்பதால் அரசு இத்தகைய முடிவை எடுத்திருப்பதாக மத்திய சுற்றுச் சூழல்துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

""பி.டி. கத்தரிக்காய் பயிரிடுவதற்கு பொதுமக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. விவசாயிகளும் இதைப் பயிரிடுவதில் தயக்கம் காட்டுகின்றனர். இத்தகைய சூழலில் அவசர அவசரமாக இதற்கு அனுமதி அளிப்பதில் அர்த்தமில்லை. மேலும் இந்த விஷயத்தில் அரசு எச்சரிக்கையுடனும் பொதுமக்களின் கருத்துக்கு மதிப்பளித்தும் செயல்படவே விரும்புகிறது. இதைக் கருத்தில் கொண்டே, இத்தகைய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது,'' என்று செய்தியாளர்கள் கூட்டத்தில் பேசுகையில் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

பி.டி. கத்தரிக்காய் பயிரிடுவது தொடர்பாக தனது முடிவை புதன்கிழமை அறிவிப்பதாக ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்திருந்தார்.

இந்த விஷயத்தில் மத்திய அமைச்சர் அவசரம் காட்டக் கூடும் என்றும், பி.டி. கத்தரிக்காயை அனுமதிக்கும் விஷயத்தில் பிரதமர் தலையிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில், செவ்வாய்க்கிழமை மாலை செய்தியாளர்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்த அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், தற்போதைக்கு பி.டி. கத்தரிக்காய் பயிரிட அனுமதிக்கப் போவதில்லை என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

அறிவியல் ரீதியில் பி.டி. கத்தரிக்காய் சாகுபடியால் எவ்வித சுற்றுச் சூழல் பாதிப்பும் ஏற்படாது என்றும், இதை சாப்பிடுவதால் மனிதர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்றும் நிரூபிக்கப்படும் வரை இதை அனுமதிக்கப் போவதில்லை என்றும் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்தார்.

பி.டி. கத்தரிக்காய் தொடர்பாக முடிவு எடுப்பது என்பது அறிவியலை சார்ந்துள்ளது. அத்துடன் உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் நலனையும் காக்க வேண்டியுள்ளது. இத்தகைய சூழலில் முடிவெடுப்பது என்பது மிகவும் சிரமமான விஷயம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

மத்திய அரசு எடுத்துள்ள முடிவானது பி.டி. கத்தரிக்காய்க்கு மட்டுமே பொருந்தும். எதிர்காலத்தில் வர உள்ள மரபணு மாற்றம் செய்யப்பட்ட வெண்டைக்காய் மற்றும் முட்டைகோஸ், நெல், தக்காளி ஆகியவற்றுக்குப் பொருந்தாது என்று அவர் குறிப்பிட்டார்.

பி.டி. கத்தரிக்காய் பயிரிடுவது தொடர்பாக 7 பெருநகரங்களில் மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் ஆலோசனைகளைக் கேட்டறிந்தார். பெரும்பாலான கருத்துக் கேட்புக் கூட்டங்களில் எதிர்ப்பே தெரிவிக்கப்பட்டது. பல இடங்களில் எதிர்ப்பு அதிகரித்து கருத்துக் கேட்பு கூட்டம் பாதியிலேயே முடிந்துபோனது.

கடந்த மாதம் இந்திய அறிவியல் காங்கிரஸ் மாநாட்டில் பிரதமர் பேசும்போது, பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி அளிப்பதற்கு முன் மக்களின் கருத்து கேட்டறியப்படும் என்று கூறினார். அதனடிப்படையில்தான் பல நகரங்களில் கருத்துக் கேட்பு நடத்தப்பட்டது என்றும் ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

""கருத்துக் கேட்புக் கூட்டங்கள் அனைத்துமே வெளிப்படைத் தன்மையோடு நடத்தப்பட்டது. இவற்றில் பல பாதியிலேயே முடிந்தன. பலவற்றில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இது தொடர்பான முடிவை பொதுமக்களிடமே விட்டுவிட்டேன். தற்போது எடுக்கப்பட்ட முடிவுக்கான காரணத்தையும் விளக்கிவிட்டேன். எனது மனசாட்சி தெளிவாக உள்ளது," என்றும் அவர் கூறினார்.

இந்த பிரச்னை குறித்து நாடாளுமன்றத்திலும் தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்திலும் விரிவாக விவாதிக்க வேண்டும் என்றே தான் விரும்புவதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு மே 13-ம் தேதி இத்துறைக்குப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை பி.டி. கத்தரிக்காய் விதை தயாரிப்பு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் எவரையும் தான் சந்தித்ததில்லை என்ற அவர் வர்த்தகத்துறை அமைச்சராக இருந்தபோது சந்தித்ததாக அவர் மேலும் கூறினார்.

ஆந்திரம் மற்றும் கேரள மாநில முதல்வர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்திருப்பது குறித்து கேட்டதற்கு, ""கத்தரிக்காய் மொத்த உற்பத்தியில் 60 சதவீதம் விளைவிக்கும் பிகார், ஒரிசா, மேற்கு வங்க மாநிலங்களும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாக," அவர் கூறினார்.

பாஜக மாநில முதல்வர்கள் அனைவரும் பி.டி. கத்தரிக்காய் சாகுபடிக்கு எதிர்ப்பு தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

பி.டி என்பதன் விரிவாக்கம்பாக்டீரியம் பாசிலுஸ் துரிஞ்ஜியென்சிஸ் என்பதாகும். இவ்விதம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட விதைகளைக் கொண்டு உருவாக்கப்படும் கத்தரிக்காய் பி.டி. கத்தரிக்காய் என்றழைக்கப்படும். இத்தகைய பி.டி கத்தரிக்காயை பூச்சி தாக்காது என்று விதை தயாரிப்பு நிறுவத்தினர் தெரிவிக்கின்றனர்.

மரபணு மாற்றம் செய்வதால் அதில் விஷத் தன்மை ஏற்படும் என்றும் இது மனிதனுக்கு கேடு விளைவிக்கும் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

நிலைமையின் தீவிரத் தன்மையைக் கருத்தில் கொண்டு சுற்றுச் சூழல் அமைச்சகம் ஒரு குழுவை அமைத்து இதுகுறித்து ஆராயச் செய்தது. இந்தக் குழு 2007-ம் ஆண்டில் சோதனை ரீதியில் சாகுபடி செய்து பார்த்தது. இதனடிப்படையில் வர்த்தக ரீதியிலான உற்பத்தியை 2009-ல் தொடங்க அனுமதி அளித்தது.

இது தவிர, வெண்டைக்காய், நெல், தக்காளி ஆகியவற்றை பயிரிடுவது தொடர்பான ஆய்வுக்கும் அனுமதி அளித்துள்ளது.

2008-ம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் பி.டி. கத்தரிக்காய் சாகுபடிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை விலக்கியது.

மரபணு மாற்ற விதைகள் தயாரிப்பில் மேஹைகோ-மான்சான்டோ பயோடெக் நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனம் வழக்கமாக பயிரிடும் கத்தரிக்காய்க்கு 50 முதல் 80 தடவை வரை பூச்சி மருந்து அடிக்கப்படுகிறது. இவை அனைத்தும் மனித உடலுக்குள்தான் செல்கிறது என்று அந்நிறுவனம் வாதாடி வருகிறது.

பி.டி. கத்தரிக்காய், பூச்சி தாக்குதலை மட்டுமே தடுக்கும். மனித உடலுக்குக் கேடு விளைவிக்காது என்றும் அது கூறிவருகிறது.

பூச்சிகள் தாக்குதலிலிருந்து காப்பதற்காக மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காய், மனித உடலுக்கு எவ்வித தீங்கும் விளைவிக்காது என்பதற்கு என்ன ஆதாரம் என்று இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தன்னார்வ நிறுவனங்கள் கோரி வருகின்றன.

### நிலத்தடி நீர் மாதிரி மசோதா: 6 மாநிலங்கள் நிராகரிப்பு

First Published : 10 Feb 2010 12:00:00 AM IST
Last Updated : 10 Feb 2010 05:22:06 AM IST

புதுதில்லி, பிப். 9: நிலத்தடி நீர் வளத்தை அதிகரிக்கவும், சேமிக்கவும் வகை செய்து மத்திய அரசு அனுப்பிய நிலத்தடி நீர் மசோதாவை பஞ்சாப் உள்ளிட்ட 6 மாநிலங்கள் நிராகரித்தன.

இந்த மசோதாவில் உள்ள அம்சங்கள் பொதுமக்களுக்கு சுமையாக இருக்கும் என அச்சம் தெரிவித்து சில மாநிலங்களும், இத்தகைய மசோதாவுக்கு அவசியமே இல்லை என்று சில மாநிலங்களும் கருத்து தெரிவித்து மத்திய அரசு அனுப்பியிருந்த மாதிரி மசோதாவை நிராகரித்தன.

நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரிப்பது, அதை முறையாக நிர்வகித்து, முறைப்படி பயன்படுத்துவதற்காக மத்திய நீர்வள அமைச்சகம் இந்த மாதிரி மசோதாவை தயாரித்து 1970ல் மாநிலங்களின் பரிசீலனைக்காக அனுப்பியது. 1992, 1996, 2005ம் ஆண்டுகளில் மீண்டும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் பரிசீலனைக்காக அனுப்பப்பட்டன.

இந்த மாதிரி மசோதாவை அடிப்படையாகக் கொண்டு நிலத்தடி நீர் கட்டுப்பாடு சட்டம் இயற்றிக்கொள்ளலாம் என்றும் மாநில அரசுகளுக்கு அது பரிந்துரைத்திருந்தது.

ஆனால் இந்த மசோதாவை பஞ்சாப், சிக்கிம், அருணாசலப் பிரதேசம், திரிபுரா, நாகாலாந்து உள்ளிட்ட 6 மாநிலங்கள் நிராகரித்துள்ளன.

ஒவ்வொரு மாநிலமும், யூனியன் பிரதேசமும் நீர்வள ஆணையம் அமைக்க இந்த மசோதா யோசனை தெரிவித்துள்ளது.

நிலத்தடி நீர் அதிக அளவில் சுரண்டப்படுவதாக சந்தேகம் எழும்பட்சத்தில் அரசு நிலத்திலோ அல்லது தனியார் இடத்திலோ சென்று கிணறு, ஆழ்குழாய் கிணறுகளை ஆணைய அதிகாரிகள் சோதனையிட அதிகாரம் தர இந்த சட்டம் வகை செய்கிறது.

மேலும் கிணறு தோண்டவோ அல்லது ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவோ ஆணையத்திடம் அனுமதி பெற்றாகவேண்டும் என்றும் மசோதா கட்டுப்பாடு விதிக்கிறது.

மத்திய அரசு அனுப்பிய மாதிரி மசோதா வழியில் ஒரு மசோதாவை தயாரித்த பஞ்சாப் அரசு, மாநில நீர்வள குழுவின் முடிவுக்கு அனுப்பியது. ஆனால், இம்மசோதா பயனாளிகளுக்கு அதிக பாதிப்பு தருவதாகக் கூறி அந்த குழு அதை நிராகரித்தது. நிலத்தடி நீரை சேமிக்க ஊக்கச் சலுகை தரலாம் என்று அது யோசனை தெரிவித்துள்ளது என்று மத்திய நிலத்தடி நீர் வாரியம் தெரிவித்துள்ளது.

சிக்கிம், அருணாசலப் பிரதேசம் ஆகியவை தமது மாநிலங்களில் நிலத்தடி நீரை அதிக அளவில் எடுப்பதே இல்லை. எனவே இந்த சட்டத்துக்கு அவசியமே இல்லை என்று கைவிரித்துவிட்டன.

நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா ஆகியவை மத்திய அரசு அனுப்பிய மசோதாவை நிராகரித்த மற்ற மாநிலங்கள்.

இதுவரை 11 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மத்திய அரசு யோசனை படி சட்டம் கொண்டுவந்து அமல்படுத்தியுள்ளன.

18 மாநிலங்கள் நிலத்தடி நீர்வள சட்டம் இயற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளன.

ஆந்திரம், கோவா, தமிழ்நாடு, கேரளம், மேற்குவங்கம், இமாசலப்பிரதேசம், பிகார்,யூனியன் பிரேசங்களான சண்டீகர், தாத்ரா, நகர் ஹவேலி, லட்சத்தீவு ஆகியவை மத்திய அரசு யோசனை படி நிலத்தடி நீர் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு முறை சட்டத்தை இயற்றியுள்ளன.

### உணவுப் பொருள் இறக்குமதி விவேகமல்ல: எம்.எஸ். சுவாமிநாதன்

First Published : 10 Feb 2010 05:02:51 AM IST

லூதியானா, பிப். 9: தட்டுப்பாடு என்ற காரணத்தால் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது விவேகமல்ல என்று வேளாண் விஞ்ஞானியும், தேசிய விவசாயிகள் ஆணையத்தின் தலைவருமான எம்.எஸ். சுவாமிநாதன் தெரிவித்தார்.

பஞ்சாப் வேளாண் கல்லூரியில், விவசாயிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. அதில் பங்கேற்று அவர் பேசியதாவது:

உணவு பாதுகாப்பு என்பது நாட்டின் முக்கிய பிரச்னையாகும். தட்டுப்பாடு என்கிற காரணத்தைக் காட்டி உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வது அரசியல்ரீதியாகவும், பொருளாதாரரீதியாகவும் ஏற்கக்கூடியதல்ல.

ஜனத்தொகை பெருக்கம் காரணமாக உணவுத் தட்டுப்பாடு ஏற்படுகிறது. அதைப் போக்க அரசுக்கு பல வழிகள் உள்ளன.

உணவுப் பொருள்களின் தேவைக்கேற்ப விவசாயிகளுக்கு போதுமான நிதியுதவி அளித்து ஊக்கப்படுத்தி விளைச்சலைப் பெருக்க வேண்டும்.

ஆராய்ச்சித் திட்டங்களில் விவசாயிகளை இணைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அவர்களது பங்களிப்பு இருக்கும்போது புதிய யோசனைகளும், சிந்தனைகளும் உருவாகும்.

அதை ஆராய்ச்சிப் பணிகளின்போது விஞ்ஞானிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று யோசனை தெரிவித்தார் எம்.எஸ். சுவாமிநாதன்.

### வேளாண் தொழில்நுட்ப கருத்தரங்கம்

First Published : 10 Feb 2010 03:20:38 AM IST

திருவண்ணாமலை, பிப்.9: திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) கருத்தரங்கம் செய்யாறில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் வ.அன்பழகன் கருத்தரங்கை தொடங்கி வைத்தார். துணை இயக்குநர் (விற்பனை) லட்சுமிபதி பேசுகையில், விவசாயிகள் பொருள்களை எவ்வாரு சந்தைப்படுத்துவது என்பது குறித்து விளக்கினார்.

வேளாண் துணை இயக்குநர் வீரமணி, செம்மைநெல் சாகுபடி குறித்தும், கீழ்நெல்லி வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர் ரமேஷ்ராஜா இயற்கை விவசாயம் குறித்தும், தோட்டக்கலை உதவி இயக்குநர் தெய்வநாயகம் தோட்டக்கலைத் துறை மானியங்கள் குறித்தும் பேசினர்.

வெம்பாக்கம் வேளாண் உதவி இயக்குநர் மாணிக்கம் விவசாய நடவு கருவி குறித்தும், வேளாண் உதவி அலுவலர் செந்தமிழ்ச்செல்வன் புதிய தொழில்நுட்பங்கள் குறித்தும் விவரித்தனர். செய்யாறு வட்டாரத்தைச் சேர்ந்த 100-க்கு மேற்பட்ட கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டனர்.

செய்யாறு ஒன்றிய குழுத் தலைவர் சுகன்யாபாரி, வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி, வேளாண் அலுவலர்கள் நாகராஜன், பாதுஷா, சிவக்குமார், அரிதாஸ் காந்தி, ராஜலட்சுமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வந்தவாசி உழவர் சந்தைக்கு சரியான பாதை இல்லை: விவசாயிகள் புகார்**

First Published : 10 Feb 2010 03:18:18 AM IST

வந்தவாசி, பிப்.9: வந்தவாசியில் உள்ள உழவர் சந்தைக்கு சரியான பாதை வசதி இல்லாததால் அது செயலிழந்து வருவதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

வந்தவாசி தாலுகா அலுவலக சாலையில் கடந்த 2009-ம் ஆண்டு ஜூன் மாதம் உழவர் சந்தை தொடங்கப்பட்டது. இதில் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்பனை செய்வதற்காக 24 கடைகள் அமைக்கப்பட்டன. இதற்கென மாம்பட்டு, அத்திப்பாக்கம், தண்டலம், இளங்காடு, சென்னாவரம், சாலவேடு, குறிப்பேடு, பாதிரி உள்ளிட்ட கிராமங்களைச் சேரந்த 110 விவசாயிகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் 24 கடைகள் கொண்ட இந்த உழவர் சந்தை, தொடங்கிய தினத்திலிருந்து 4 அல்லது 5 கடைகளில் மட்டுமே விற்பனை நடைபெறுகிறது. மற்ற கடைகள் அனைத்தும் உபயோகம் இல்லாமல் காலியாகவே உள்ளன.

இதுகுறித்து விவசாயிகள் தெரிவித்தது:

உழவர்சந்தை அமைந்துள்ள தாலுகா அலுவலக சாலை பெரும்பாலும் வெறிச்சோடி கிடப்பதால் இங்குவர பொதுமக்கள் தயங்குகின்றனர். இச்சாலைக்கு இணையாக அடுத்து அமைந்துள்ள அச்சரப்பாக்கம் சாலையில் தனியார் காய்கறி பஜார் உள்ளது. இந்த பஜாரின் நடுவில் வருவாய் ஆய்வாளர் அலுவலகம் உள்ளது. இந்த அலுவலகத்துக்கு பின்புறம் உழவர் சந்தை உள்ளதால், அலுவலகம் வழியாக பாதை வசதி ஏற்படுத்தினால் தனியார் காய்கறி பஜாருக்கு வரும் பொதுமக்கள் உழவர்சந்தைக்கு செல்ல எளிதாக இருக்கும். இதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**பி.டி. கத்தரிக்காய் தடை கருத்தரங்கு**

First Published : 10 Feb 2010 12:34:33 AM IST

புதுச்சேரி, பிப். 9: புதுச்சேரியில் மரபணு மாற்று (பி.டி.) கத்தரிக்காய் தடை குறித்த கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

÷வில்லியனூரில் இந்திய சமூக செயல்பாட்டு பேரவை மற்றும் வோர்ட் அமைப்பு சார்பில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. புதுச்சேரி பூவுலகின் நண்பன் அமைப்பைச் சேர்ந்த சீனு தமிழ்மணி, ஹோப் நிறுவனத்தின் இயக்குநர் ஜோசப் விக்டர் ராஜ், கருணாலயம் கிராம நலச் சங்க இயக்குநர் அங்காளன், அன்பாலயம் அமைப்பின் செயலர் மேரி, ரோஸ் அமைப்பின் தலைவர் எஸ்.திருமாள், செம்படுமை நண்ணீரகம் அமைப்பாளர் ராமமூர்த்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**கரும்பு விவசாயிகளுக்கு முதலில் ஆதரவு தந்தவர் ஜெயலலிதா**

First Published : 10 Feb 2010 03:17:14 AM IST

திருவண்ணாமலை, பிப்.9: கரும்பு விவசாயிகளுக்கு முதலில் ஆதரவு தந்தவர் அதிமுக பொதுச்செயாளர் ஜெயலலிதாதான் என அக்கட்சியின் தலைமை நிலையச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான கே.ஏ.செங்கோட்டையன் கூறினார்.

திருவண்ணாமலை ஒன்றியம் வேங்கிக்காலில் அதிமுக தெற்கு மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடந்தது. இதில் அவர் பேசியது:

கடந்த மூன்றரை ஆண்டுக்கால திமுக ஆட்சியில் தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து கிடக்கிறது. ரெப்டிகள் சுதந்திரமாக திரிகின்றனர். கட்டப்பஞ்சாயத்து, கொலை, கொள்ளை அதிகரித்துவிட்டது. விலைவாசி உயர்வை குறைக்க தமிழக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த அதிமுக ஆட்சியின் போது சர்க்கரை கிலோ ரூ.13-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஒரு டன் கரும்புக்கு ரூ.1014 வழங்கப்பட்டது. ஆனால் சர்க்கரை விலை அதிகரித்தும் விவசாயிகளுக்கு உரிய பலன் கிடைக்கவில்லை.

வரும் 13-ம் தேதி விழுப்புரத்தில் நடக்க உள்ள ஆர்ப்பாட்டத்தில் அதிமுகவினர் திரளாகக் கலந்து கொள்ள வேண்டும் என்றார் செங்கோட்டையன்.

மாவட்ட அவைத் தலைவர் எஸ்.ராமச்சந்திரன் தலைமை தாங்கினார். தேர்தல் பிரிவு இணைச் செயலர் நா.பாலகங்கா எம்.பி, மாவட்டச் செயலாளர் அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி எம்எல்ஏ, நகர செயலாளர் வி.கனகராஜ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### விவசாயிகள் நலவாரிய உறுப்பினர் பதிவு புதுப்பிக்கும் காலம் 5 ஆண்டாக மாற்றம்

First Published : 10 Feb 2010 12:23:00 AM IST

விழுப்புரம், பிப். 9: தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் நலவாரிய உறுப்பினர் பதிவை புதுப்பிக்கும் காலம் 3 ஆண்டிலிருந்து 5 ஆண்களாக மாற்றப்பட்டுள்ளதாக ஆட்சியர் ஆர். பழனிசாமி தெரிவித்துள்ளார்.

÷இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு விவரம்:

÷இத் திட்டத்தின் கீழ் 2.5 ஏக்கர் வரை நஞ்சை நிலம் அல்லது 5 ஏக்கர் வரை புஞ்சை நிலம் வைத்துள்ள விவசாயிகளும் மற்றும் விவசாயத் தொழிலாளர்களும் உறுப்பினராகும் தகுதி பெற்று பல்வேறு பயன்களை பெற்றுவருகின்றனர்.

÷இத் திட்டத்தின் வாயிலாக திருமண உதவித்தொகை, இயற்கை மரணம், ஈமச்சடங்கு, முதியோர் உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு உதவித்தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

÷உறுப்பினர்களின் பதிவு மூன்றாண்டு முடிவில் புதுப்பிக்கப்பட வேண்டுமென உள்ளது. இதில் 70 லட்சம் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அனைத்து அடையாள அட்டைகளையும் புதுப்பிக்கும் பணிக்கு கால அளவு அதிகமாக தேவைப்படும் என்பதாலும், இடைப்பட்ட காலத்தில் உறுப்பினர்களின் குடும்பங்களில் ஏற்படும் நிகழ்வுகளுக்கு உதவித்தொகை வழங்குவதில் சட்ட சிக்கல்கள் ஏற்படும் என்பதாலும் தற்சமயம் உறுப்பினர் புதுப்பிப்பை 5 ஆண்டுகள் என கால நீட்டிப்பு செய்து முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

÷எனவே விழுப்புரம் மாவட்டத்திலுள்ள சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர்களும், வருவாய் ஆய்வாளர்களும், கிராம நிர்வாக அலுவலர்களும் கால நீட்டிப்பு செய்துள்ள விவரத்தை உறுப்பினர் அடையாள அட்டை பெற்றுள்ளவர்களுக்கு தெரிவித்திடுமாறு ஆட்சியர் கூறியுள்ளார்.

**கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க அலுவலகம் திறப்பு**

First Published : 09 Feb 2010 10:16:55 AM IST

தாராபுரம், பிப். 8: கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்க புதிய அலுவலகத் திறப்பு விழா தாராபுரத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

சங்க மாவட்டத் தலைவர் காளிமுத்து புதிய அலுவலகத்தைத் திறந்து வைத்துப் பேசினார். இளைஞரணிச் செயலர் தங்கராஜ், குண்டடம் வட்டாரத் தலைவர் ராசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கேரள அரசு பாம்பாறு ஆற்றின் குறுக்கே புதிய அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும், கரும்பு டன்னுக்கு ரூ.2,500 கொள்முதல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**காதலர் தினம்: வெளிநாடுகளில் ஒசூர் ரோஜா**

First Published : 10 Feb 2010 03:16:00 AM IST

ஒசூர், பிப். 9: காதலர் தினத்தையொட்டி, பிப்.1 முதல் 9-ம் தேதி வரை 9 நாள்களில் ஒசூரில் இருந்து 3 கோடி ரோஜா பூக்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தற்போதும் ஏற்றுமதி நடைபெற்று வருகிறது. கூடுதல் விலை கிடைப்பதால், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆண்டு முழுவதும் 11 டிகிரி செல்சியஸ் முதல் 18 டிகிரி செல்சியஸ் வரை குளிர்ந்த சீதோஷ்ணநிலை நிலவுவதால் ஒசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாக்களில்

சுமார் 8 ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் பசுமைக் குடில்கள் அமைத்து ரோஜா பூக்களை விவசாயிகள் உற்பத்தி செய்து வருகின்றனர்.

ஒரு ஏக்கர் முதல் 200 ஏக்கர் நிலப் பரப்பில் அமுதகொண்டப்பள்ளியில் பசுமைக் குடில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் ரோஜா பூக்களை அதிக குளிர் மற்றும் வெப்பம் தாக்காது.

புகழ்பெற்ற ஜெர்பரா, ரெட்ஜெயன்ட், தாஜ்மஹால், ரெட்கார்வெட், கார்நேஷன் போன்ற ரோஜாக்கள் ஒசூரில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

தமிழக அரசு நிறுவனமான டிட்கோவும், ஆந்திர தனியார் நிறுவனமும் இணைந்து ஒசூர் அமுதகொண்டப்பள்ளியில் 2 ஆயிரம் ஏக்கர் நிலப்பரபில் ரோஜா ஏற்றுமதி மண்டலம் அமைத்துள்ளன. தற்போது காதலர் தினத்தையொட்டி, தினமும் 1 கோடி பூக்கள் ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

இதுகுறித்து டான்ஃப்ளோரா மேலாளர் ரமேஷ் ரெட்டி கூறியது:

ஆண்டு முழுவதும் அமெரிக்கா, ஐரோப்பா, ஜெர்மன், ஆஸ்திரேலியா, சவுதி அரேபியா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு ரோஜா பூக்கள் ஏற்றுமதி செய்து வருகிறோம். தற்போது, காதலர் தினத்தில்தான் ரோஜா பூக்களுக்கு அதிக விலை கிடைக்கிறது.

டிசம்பர் மாதம் முதல் காதலர் தினம் கொண்டாடப்படும் பிப்ரவரி மாதம் வரை அதிக விலைக்கு ரோஜாக்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது ஒரு ரோஜா பூவின் விலை ரூ.10 முதல் ரூ.45 வரை ஆகும். இந்த சீசனில் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும்.

இந்த ஆண்டு  ரோஜா ஏற்றுமதி செய்ய அதிக ஆர்டர் கிடைத்துள்ளதால், விவசாயிகள் கடந்த 10 நாள்களாக இரவு பகலாக ரோஜா பூக்களை ஏற்றுமதி செய்து வருகின்றனர்.

10 சென்ட் நிலத்தில் பசுமைக் குடில் அமைத்துள்ள சிறிய விவசாயிகள் கூட இந்த ஆண்டு அதிக லாபம் அடைந்துள்ளனர் என்றார்.

## 2871 விவசாயிகளுக்கு பயிர்சேத வெள்ள நிவாரணத் தொகை ரூ.56 லட்சம்

First Published : 09 Feb 2010 10:07:25 AM IST
Last Updated : 09 Feb 2010 10:37:08 AM IST

உதகை, பிப். 8.  நீலகிரி மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் பெய்த பலத்த மழையால் பாதிக்கப்பட்ட 2,871 விவசாயிகளுக்கு பயிர் சேதார வெள்ள நிவாரணத் தொகையாக ரூ.56 லட்சம் உதவித் தொகையை தமிழக கதர் வாரியத்துறை அமைச்சர் இளித்துரை ராமச்சந்திரன் வழங்கினார்.

நீலகிரி மாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதத்தில் பெய்த பலத்த மழையால் தோட்டக்கலை பயிர்களும், மலைக்காய்கறிகளும், தேயிலை பயிருமாக சுமார் 739 ஹெக்டேர் பரப்பளவிலான பயிர்கள் சேதமடைந்தன. இதில் பாதிக்கப்பட்ட 2,871 விவசாயிகளுக்கு பயிர் சேதார வெள்ள நிவாரணத் தொகையாக ஹெக்டேருக்கு ரூ.7,500 வீதம் வழங்க தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. இதற்காக ரூ.55 லட்சத்து 38,800 நிவாரணத் தொகையாகவும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

இதன்படி உதகை வட்டத்தில் 359 ஹெக்டேர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.27 லட்சமும், குந்தா வட்டத்தில் 136 ஹெக்டேர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.10.22 லட்சமும், கோத்தகிரி வட்டத்தில் 83 ஹெக்டேர் நிலப்பரப்பில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.6.19 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிவாரணத் தொகைகளை தமிழக கதர் வாரியத்துறை அமைச்சர் இளித்துரை ராமச்சந்திரன் திங்கள்கிழமை வழங்கினார்.

இத்தொகையில் முதற்கட்டமாக தமிழக துணை முதல்வர் ஸ்டாலின் கோத்தகிரிக்கு வந்திருந்தபோது ரூ.3 லட்சம் இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கியிருந்தார். அதன்பின்னர் கோத்தகிரி பகுதி விவசாயிகளுக்கு அறிவிக்கப்பட்ட தொகை முற்றிலும் வழங்கப்பட்டது. குன்னூர் வட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூ.12 லட்சத்தில் இதுவரை ரூ.7.2 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. உதகை மற்றும் குந்தா பகுதிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.37 லட்சத்தில் இதுவரை ரூ.17 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ.20 லட்சம் தொகையை தமிழக கதர் வாரியத்துறை அமைச்சர் இளித்துரை ராமச்சந்திரன் விவசாயிகளுக்கு திங்கள்கிழமை உதகையில் நேரடியாக வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் ராமச்சந்திரன் பேசியதாவது:

விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட தமிழக முதல்வர் பொறுப்பேற்ற உடனேயே ரூ.7,000 கோடி விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்தார். இதில் நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும் ரூ.87 விவசாயக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேலும் கடந்த 3 ஆண்டுகளில் ரூ.64.58 கோடி புதிதாக விவசாயக் கடனாகவும்

வழங்கப்பட்டுள்ளது. இதைத்தவிர கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.56 லட்சம் மதிப்பிலான இழப்பீட்டுத் தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு இடுபொருட்கள் தட்டுப்பாடின்றி கிடைப்பதற்காக ரூ.70 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழகம் முழுதும் 25 லட்சம் விவசாயிகளுக்கு ரூ.40 கோடி மதிப்பில் மானியமும் வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டார்.

**வளரும் நாடுகளின் எதிர்கால வேளாண்மை**

ஆர்.எஸ். நாராயணன்First Published : 10 Feb 2010 12:00:00 AM IST

உலகில் உண்மையான வேளாண்மை இந்தியா, ஆப்பிரிக்கா, இதர ஆசிய நாடுகளில் மட்டுமே நிகழ்கிறது. வடக்கு நாடுகளில் உண்மையான வேளாண்மை அழிந்துவிட்டது. அங்கு நிகழ்வது தொழில்மய வேளாண்மை.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு மரவளர்ப்புடன் எரிசக்தியை மிச்சப்படுத்தும் விவசாயத்தை இணைத்துப் "பர்மாகல்ச்சர்' (ல்ங்ழ்ம்ஹஸ்ரீன்ப்ற்ன்ழ்ங்) என்ற ஒரு வேளாண் பண்பாட்டை உருவாக்கிய பில்மோலிசன் செய்த முன்னெச்சரிக்கை இன்று உண்மையாகிவிட்டது. அவர் செய்த முன்னெச்சரிக்கை இதுதான்.

""இன்னும் இருபது ஆண்டுகளில் அமெரிக்காவின் உதவித் திட்டங்களின் ஏமாற்று வேலைகள் வெட்ட வெளிச்சமாகும். இயற்கை விவசாயத்தின் மீது உண்மையான கவனம் திரும்பும். தொழில்மய விவசாயம் மெல்ல மெல்ல அழிந்துவிடும். பெருகிவரும் சாகுபடிச் செலவைச் சமாளிக்க முடியாது.

தொழில்மய விவசாயத்தில் இடுபொருள் செலவு பெட்ரோல், டீசல் போன்ற மீண்டும் புதுப்பிக்க முடியாத புதைவு எரிசக்தித் தேவையின் காரணமாக ஆண்டுக்கு ஆண்டு உயர்ந்து வருகிறது. அதாவது என்.பி.கே. என்று சொல்லப்படும் ரசாயன உரங்கள், அழிந்துவரும் புதைவு எரிசக்திகளை வைத்து உற்பத்தியாவதால் பெட்ரோல் விலை உயர்ந்தால் உரவிலையும் உயர்ந்து பட்ஜெட்டின் பெரும்பகுதிச் செலவை உரமானியத்துக்கு மட்டுமே வழங்க வேண்டிவரும்.

இப்படிப்பட்ட உரம், விதைகள் எல்லாம் பன்னாட்டு நிறுவனங்களின் பிடிப்பில் உள்ளன. எவ்வளவு விரைவில் வளரும் நாடுகளின் விவசாயம் பன்னாட்டு முதலாளிகளிலிருந்து மீட்கப்படுகிறதோ அவ்வளவு விரைவாக வளரும் நாடுகள் நலம் பெறும். வாழ்வியலை மையமிட்ட வேளாண்மையே என்றும் நிலைத்திருக்கும். ஏனெனில் அது தற்சார்புள்ளது. அதில் பெட்ரோலிய எரிசக்தி வீணாவது இல்லை......."

அவரின் இந்த முன்னெச்சரிக்கை வாசகங்கள் இன்று உண்மையாகிவிட்டது.

காலநிலைத் தடுமாற்றத்தால் விவசாயம் தடுமாறுகிறது என்று கூறினாலும் சரி; தொழில்மய விவசாயத்தினால் காலநிலைத் தடுமாற்றம் ஏற்படுகிறது என்று கூறினாலும் சரி; காலநிலைத் தடுமாற்றம் அல்லது தட்பவெப்பத் தடுமாற்றம் பசுமையகக் கெட்ட வாயுக்களால் உருவாகிறது என்பதை அனைவரும் அறிவோம்.

தொழில் நகரங்கள், கார், லாரி போன்ற போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றால் 70 சதம் கெட்ட வாயுக்கள் உருவாகின்றன. தொழில்மய விவசாயத்தின் பங்கு 30 சதம் என்பது ஒரு குறைவான மதிப்பீடுதான். ஏனெனில் ரசாயன உர உற்பத்தி, ரசாயன உரங்களின் போக்குவரத்து எல்லாம் தொழில்துறையின் கெட்ட வாயு வெளியீட்டுக்கான காரணமாகக் கணக்கிடப்பட்டுள்ளன.

யூரியா, என்.பி.கே. காம்ப்ளக்ஸ் போன்றவை மண்ணில் இடப்பட்டு வெளியேறும் நைட்ரஸ் ஆக்சைடு என்ற கெட்ட வாயு, நவீன கால்நடை - பால் பண்ணைகளிலிருந்து வெளியாகும் மீத்தேன் என்ற கெட்ட வாயு ஆகிய இரண்டும் ஓசோன் படலத்தைத் துளைப்பதில் கார்பன் டை ஆக்சைடைவிட வலிமை வாய்ந்ததாக நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறு தட்பவெப்பத் தடுமாற்றத்தை உருவாக்கும் தொழில்மய விவசாயத்தால் உலகளாவிய நிலையில் கோடிக்கணக்கான விவசாயிகளும், தட்பவெப்பத் தடுமாற்றத்திற்குட்பட்ட நிலங்களில் வசிக்கும் 37 கோடி கிராமிய ஏழைகளும் பாதிக்கப்படுவார்கள் என்று ஐ.நா. அமைப்புகள் மதிப்பிட்டுள்ளன.

தட்பவெப்பத் தடுமாற்றம் ஏற்படுத்தும் கனமழை, கூடுதல் வெப்பம், கூடுதலான குளிர், கூடுதல் வறட்சி, புயல், வெள்ளம் எல்லாம் நமது விவசாய பட்டப் பழமொழிகளை மாற்றிவிடும். ஆடிப்பட்டம் தேடி விதைத்தால் ஆவணி, புரட்டாசி மாதங்களில் பருவம் பொய்த்து சித்திரை வெய்யில் தாக்கும். சித்திரை மாதம் மழை பெய்யலாம். குளிர் அடிக்கலாம். ஆடிப்பட்டம் பொய்த்தால் தைப்பட்டம். உத்தராயணத்தில் வெய்யில் இல்லாமல் மழை பெய்து தைப்பட்டம் தம்பட்டமாகும். உலகில் 80 சத விவசாயம் மானாவாரிதான். இப்படிப்பட்ட சூழ்நிலையில் மானாவாரி விவசாயமே மூச்சடைத்துப் போகும் ஆபத்து உள்ளது.

வளரும் நாடுகளில் ஆண்டுக்கு ஆண்டு ரசாயன உரங்களின் தேவை உயர்ந்து வருகிறது. ரசாயன உரங்கள் பெட்ரோல், டீசல் போன்ற மீண்டும் புதுப்பிக்க முடியாத புதைவு எரிசக்தியைப் பயன்படுத்தி உற்பத்தியாவதால் எரிசக்தி நெருக்கடியைத் தோற்றுவிக்கும். அத்தோடு ரசாயன உரப்பயன்பாடு இயற்கை வழி விவசாயத்தைவிட மூன்று மடங்கு கெட்ட வாயுக்களை உருவாக்கித் தட்பவெப்பத் தடுமாற்றத்தை ஏற்படுத்துகிறது.

2030-ஐ நாம் நெருங்கும்போது ரசாயன உர உற்பத்தியை 37 சதம் உயர்த்தும் திட்டம் உள்ளதால் கெட்ட வாயுக்களின் உற்பத்தியும் உயர்ந்து, எரிசக்திச் செலவும் உயர்ந்து நமது கண்களை நாமே குத்திக் கொண்டு குருடர்களாக வாழப் போகிறோம். கெட்ட வாயுக்களின் உற்பத்தியாளரான உர நிறுவனங்களும், விதை நிறுவன பகாசூரர்களும் மூன்றாம் உலக நாடுகளின் விவசாயக் கொள்கையை வகுத்து வருகிறார்கள். அவர்கள் அறிந்ததெல்லாம் உயிர்ச்சூழலுக்கு உலைவைக்கும் ஒரே ரகப் பயிர்ப்பண்பாடு - அதாவது மோனோகல்ச்சர்.

உலகிற்குப் பாதுகாப்பான விவசாயம் பர்மாகல்ச்சரிலும், பல்லுயிர்கல்ச்சர் என்று சொல்லப்படும் பயோடைவர்ஸ் விவசாயத்திலும் உள்ளதை அவர்கள் அறிவார்கள் என்றாலும் விதை நிறுவன - உர நிறுவன பகாசூரர்களுக்கு அவற்றால் சுயலாபம் சிறிதும் இல்லை.

உலகத்தில் இயற்கை விவசாயத்தைப் பரப்புவதில் எல்லா நாடுகளிலும் கிளை அமைப்புகளைக் கொண்டது ரோடேல் நிறுவனம். இந்நிறுவனம் தத்துவரீதியாக ஒரு மாற்றுத்திட்டத்தை முன்மொழிந்து எவ்வாறு எதிர்கால இடர்களை - தட்பவெப்பத் தடுமாற்றத்துக்குரிய சவாலைச் சந்திப்பது என்பதற்கான சில டிப்ஸ் வழங்கியுள்ளது.

இந்த அரிய யோசனைகளை கடைப்பிடித்தால் நாமும் நமது சந்ததிகளும் பிழைக்கவும் நாடு செழிக்கவும் வாய்ப்புகள் உண்டு.

கரியமில வாயுவைப் பிடித்து வைத்துப் பிராணவாயுவாக மாற்றும் உயிர் மண்ணை - அதாவது பல்லுயிரிகளைக் கொண்ட மண்ணை உருவாக்க வேண்டும்.

மண்ணானது நைட்ரஜனைப் பிடித்து வைத்துக் கொண்டு அதேசமயம் நைட்ரிக் ஆக்சைடாக வெளியேற்றாமல் இருக்க பயறுவகைப் பயிர்களான உளுந்து, தட்டைப் பயறு, பாசிப்பயறு, துவரை, அகத்தி, வேர்க்கடலை,

வெந்தயம், தக்காளி, அவரை, மொச்சை போன்றவற்றை பயிரிட வேண்டும். இவற்றை ஆங்கிலத்தில் லெகுமினஸ் பயிர்கள் என்பார்கள்.

இவ்வகைப் பயிர்களைக் கலப்பாகவோ, பயிர்ச்சுழற்சி முறையிலோ பயிரிடும் பாரம்பர்ய மரபை மீட்டுயிர்த்தால் யூரியா செலவைக் குறைக்கலாம்.

யூரியாவைப் பயன்படுத்தும்போது பயிர் ஏற்காதவை, நைட்ரேட்டாக மாறிக் குடிநீரை விஷமாக்கும் அல்லது நைட்ரிக் ஆவியாகமாறி பிராணனை வாங்கும். அதாவது ஓசோனைக் கிழிக்கும்.

மூன்றாவதாக பெரன்னியல் பயிர்களைச் சாகுபடி செய்வது. பெரன்னியல் என்றால் அதிக வயதுள்ள பயிர்கள். இதனால் கார்பன் மண்ணுக்குள் இருந்து வெளியேறாமல் இருக்கும்.நான்காவதாக, பசுமை அல்லது உயிர் மூடாக்கு. அதாவது ஒரு அறுவடைக்குப் பின் முன்கூட்டியே விதைத்துப் பசுமையாக்கி அடுத்த விதைப்பு வரை நிலத்தைத் தரிசாகப் போடாமல் இருத்தல். பொதுவாக நிலத்தைப் பசுமை மாறாமல் வைத்திருக்க வேண்டும். இதனால் மண்ணில் உள்ள நைட்ரஜனானது, நைட்ரஜன் ஆக்சைடு என்ற கெட்ட வாயுவாக வெளியேறாது.

வளரும் நாடுகளின் எதிர்கால வேளாண்மையைப் பற்றி ஆராய்ந்துவரும் வேளாண் விஞ்ஞானி லைம் லை சிங் இன்றைய வேளாண்மை வெளிப்படுத்தும் பசுமையகக் கெட்ட வாயுக்களை எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் திறன் இயற்கை வேளாண்மைக்கு மட்டுமே உண்டு என்கிறார். அவர் விடுத்துள்ள ஒரு செய்திமடலில், இன்றைய விவசாயம், ஓசோனைத் தின்னும் ஒட்டுமொத்த கெட்ட வாயுக்களில் பத்துமுதல் பன்னிரண்டு சதத்தை மேலே செலுத்துகிறதாம். அவற்றில் இ02 என்ற கரியமில வாயு இஏ4 என்ற மீத்தேன் வாயு ச2ர் என்ற நைட்ரிக் வாயு அடங்கும்.

கால்நடை வளர்ப்போர் சாணியைச் சேர்த்துக் குவித்து, திறந்த வெளியில் கொட்டுவதால் மீத்தேன் வாயுவும், ரசாயன உரங்களை மண்ணில் கொட்டுவதால் நைட்ரிக் வாயுவும் கெட்ட வாயுக்களாக மாறுகின்றன. பசுமைப் பொருள்களான பயோமாசை எரிப்பதாலும் கார்பன்டை ஆக்சைடு கெட்ட வாயுவாகிறது.

தட்பவெப்பத் தடுமாற்ற விளைவைக் கருத்தில் கொள்ளாமல் நாம் செய்யும் விவசாயம் நமக்கே ஆபத்தைத் தேடித்தரும். தட்ப வெப்பத் தடுமாற்றத்துக்கு ஏற்ப விவசாயத்தைத் தடுமாறாமல் இட்டுச் செல்வது இயற்கை விவசாயமே.

ஒரு நிலத்தில் ஒரேவகைப் பயிரைச் சாகுபடி செய்யாமல் பலரகப் பயிர்களைச் சாகுபடி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு வகையிலும் பலரகங்கள் உண்டு. கத்தரிக்காய் என்று எடுத்துக் கொண்டால் பி.டி. கத்தரிக்காயை மட்டுமே சாகுபடி செய்தால் குலநாசம் ஏற்படும். மாறாக 50 சென்டு நிலத்தில் கத்தரிக்காய் பயிர் செய்ய விரும்பினால், 10 சென்டு பச்சைக் கத்தரிக்காய், 10 சென்டு வெள்ளைக் கத்தரிக்காய், 10 சென்டு ஊதா கத்தரி 10 சென்டு எண்ணெய்க் கத்தரிக்காய், 10 சென்டு முள்ளுக் கத்தரிக்காய் என்று பிரித்து நடுவதே பயோடைவர்ஸ் விவசாயம்.

இடையிடையே குச்சிப் பந்தலிட்டு புடல், பீர்க்கை என்று நிறைய இடைவெளிவிட்டு சாகுபடி செய்யலாம். ஒரு பக்கம் திரும்பினால் சோளம், ஒரு பக்கம் திரும்பினால் நெல், ஒருபக்கம் திரும்பினால் வாழை, ஒரு பக்கம் தீவனப்புல், தட்டைப் பயறு என்று பல வகைகளிலும் பல ரகங்களைக் கலந்து பயிரிட வேண்டும்.

இவ்வாறு செய்யும்போது தட்பவெப்பத் தடுமாற்றத்தைத் தாங்கக்கூடிய வகைகளையும் ரகங்களையும் அறிவது எளிதாகும். ஒரு ரகத்தில் ஏற்படும் நஷ்டத்தை வேறு ரகம் தரும் லாபத்தைக் கொண்டு சமாளிக்கலாம்.

உண்ணும் பயிர்களில் மட்டுமல்ல; கால்நடை வளர்ப்பிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். தட்பவெப்பத் தடுமாற்றத்தால் நோய்களிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆடு மாடுகள், கடல் மட்டம் உயர்வு, தாழ்வு, வெப்பம் போன்ற கடல் சூழலுக்கு ஏற்ப வாழக்கூடிய மீன்வகை இனப்பெருக்கம் என்று மீன், கால்நடைகளிலும் பல்லுயிர்ப் பெருக்கம் விரும்பப்படுகிறது.

தட்பவெப்பத் தடுமாற்றத்தால், வளரும் நாடுகளில் வாழும் சிறு, குறு விவசாயிகள் மற்றும் மீனவர்கள், ஆதிவாசிகள் அதிக அளவில் உணவு இல்லாமல் மடிவர் என்று ஐ.நா. மதிப்பீடு கூறுகிறது.

தட்பவெப்பத் தடுமாற்றத்தால் அதிகம் தடுமாறக்கூடிய நிலப் பகுதிகளில் வாழும் சுமார் 40 கோடி மக்கள் பல்லுயிர்ப் பெருக்கரீதியான விவசாயம், மீன் வளர்ப்பு, கால்நடை வளர்ப்பில் ஈடுபடுவதன் மூலம் தங்கள் வாழ்வை வளப்படுத்த வாய்ப்புள்ளதாக பல்லுயிர்ப் பெருக்க - உயிர்ச்சுழல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

### இழப்பீடு கோரி ஆட்சியரிடம் விவசாயிகள் மனு

First Published : 09 Feb 2010 12:20:34 PM IST

சிவகங்கை, பிப்,8:   தேவகோட்டை தாலுகாவில் 2,000 ஹெக்டேரில் நோய் தாக்குதலால் நெற்பயிர்கள் சேதமாகி இருப்பதாகக் கூறி இரு கிராம விவசாயிகள் சிவகங்கை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்.

கண்ணங்குடி பிர்காவைச் சேர்ந்த சிறுவாச்சி, புத்தூரணி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த இவ் விவசாயிகளின் கோரிக்கை:

எங்கள் கிராமத்தில் நன்செய் நிலங்களில் பயிர் செய்யப்பட்டிருந்த நெற் பயிர்களில் பயிர் விளையும் தறுவாயில் புகையான், நெல் பழம், குலைநோய் தாக்குதல் ஏற்பட்டு பெரிதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சுமார் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் பாதிப்பு ஏற்பட்டு இருப்பதால், விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர். எனவே, பயிர் பாதிப்பை வேளாண் அலுவலர்கள் மூலம் நேரில் பார்வையிடச் செய்து, அதற்கான இழப்பீட்டுத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகையை அரசு மூலம் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மே மாதத்தில் வங்கி வட்டி விகிதம் உயரும்: ஓ.பி. பட்

First Published : 10 Feb 2010 12:00:00 AM IST

புது தில்லி, பிப்.9: வங்கி வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் மே மாதத்தில் உயர்த்தப்படும் என்று பாரத ஸ்டேட் வங்கியின் தலைவர் ஓ.பி. பட் தெரிவித்துள்ளார்.

பணப் புழக்கம் கட்டுக்குள் வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் வட்டி விகிதம் ஸ்திரமாக உள்ளது. உடனடியாக உயர்த்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லை என்று அவர் மேலும் கூறினார்.

வரும் நிதி ஆண்டில் (2010-11) மே அல்லது ஜூன் மாதத்தில் வட்டி உயர்த்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

ரிசர்வ் வங்கி தனது காலாண்டு ஆய்வுக் கொள்கையின்போது ரொக்கக் கையிருப்பு விகிதத்தை 5 சதவீதத்திலிருந்து 5.75 சதவீதமாக உயர்த்தியது. இதனால் வங்கிகள் வழங்கும் கடன் அளவு ரூ. 36 ஆயிரம் கோடி குறைந்தது. ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள ரொக்கக் கையிருப்பு விகித உயர்வு பிப்ரவரி 13-ம் தேதியிலிருந்து அமலாக உள்ளது.

இதனால் வங்கி அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம் உயர வாய்ப்புள்ளது என்று கூறினார். இதே கருத்தை ஐசிஐசிஐ வங்கித் தலைவர் சந்தா கோச்சாரும் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வங்கிகள் இணைப்பு: பாரத ஸ்டேட் வங்கியுடன் இந்தூர் ஸ்டேட் வங்கி இணைக்கும் பணிகள் மார்ச் மாதத்திற்குள் நிறைவடையும். ஏற்கெனவே எஸ்பிஐ செளராஷ்டிர வங்கியும் பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த இணைப்புக்குப் பிறகும் ஸ்டேட் பாங்க் ஆஃப் பிகானீர் அண்ட் ஜெய்ப்பூர், ஸ்டேட் பாங்க் ஆஃப் திருவாங்கூர், ஸ்டேட் பாங்க் ஆஃப் பாட்டியாலா, ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர் ஆகிய வங்கிகள் தனியே செயல்படுகின்றன.

தற்போது ராணுவ வீரர்களுக்கான சிறப்பு சேவையை எஸ்பிஐ தொடங்கியுள்ளது. இதன்படி ராணுவ வீரர்களுக்குத் தேவையான வங்கிச் சேவைகள் இலவசமாக அளிக்கப்படும் என வங்கி தெரிவித்துள்ளது.

### ரூ.2.37 காசுகளாக உயர்வு

First Published : 09 Feb 2010 10:12:21 AM IST

நாமக்கல், பிப்.8: தமிழகம் மற்றும் கேரளத்தில் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை ரூ.2.37 காசுகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கடந்த ஒரு வாரத்தில் முட்டை ஒன்றுக்கு 7 காசுகள் விலை உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் (என்இசிசி) விலைநிர்ணயக் குழுவானது திங்கள்கிழமை கூடி முட்டை விலையை ரூ. 2.37 காசுகளாக நிர்ணயம் செய்து அறிவித்தது (முந்தைய விலை ரூ. 2.34). கடந்த வாரம் ரூ. 2.30-க்கு விற்ற முட்டையானது இந்த வாரம் 7 காசுகள் விலை உயர்ந்திருப்பதற்கு நுகர்வு அதிகரிப்பு, பிற மாநில சந்தைகளில் விலை உயர்வும் காரணமாக அமைந்துள்ளது.

இதேபோல், முட்டைக் கோழியின் விலை கிலோ ரூ. 23 ஆக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஒற்றைச் சாளர முறைப்படி முட்டைக் கோழிகளை விற்பனை செய்ய என்இசிசி கடந்த வாரம் முடிவு செய்தது. இதன்படி, பண்ணையாளர்கள் தங்களது முட்டைக் கோழிகளை கிலோ ரூ.23-க்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும். விலையை குறைத்து கேட்கும் நபர்களுக்கு கோழிகளை வழங்க வேண்டாம்.

என்இசிசி அலுவலகத்தை வேலைநேரத்தில் 04286-221572 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கே முட்டைக்கோழிகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

நாமக்கல் மண்டலத்தைச் சேர்ந்த கோழிப் பண்ணையாளர்கள் என்இசிசி நடவடிக்கைக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என மண்டலத் தலைவர் டாக்டர் பி. செல்வராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்ய வேண்டும்**

First Published : 10 Feb 2010 03:04:20 AM IST

அரக்கோணம், பிப் 9:விதைகளை விலை கொடுத்து வாங்காமல் தமிழக அரசின் விதை கிராம திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்று விவசாயிகளே அவற்றை தயாரித்து கொள்ள வேண்டும் என்று உதவி வேளாண் இயக்குநர் வி. ஜெயச்சந்திரன் அறிவுரை வழங்கினார்.

அரக்கோணத்தை அடுத்த தண்டலத்தில் செவ்வாய்க்கிழமை வேளாண்மை துறையினரின் கிராம விதைத் திட்ட பயிற்சி முகாம் நடந்தது. இதில் பங்கேற்ற அவர் பேசியது:

விதைகளை உற்பத்தி செய்ய விவசாயிகள் முன்வர வேண்டும். ஒரு ஏக்கரில் மணிலா 80 கிலோ விதைக்காக போட்டால், 800 முதல் 1000 கிலோ வரை விதைகள் கிடைக்கும்.

ஒரு ஏக்கரில் விதை உற்பத்தி செய்தால் அதை 10 ஏக்கருக்கு பயன்படுத்தலாம். கிராமத்தில் 10 விவசாயிகள் நிலக்கடலை விதைகளை உற்பத்தி செய்தால், அவற்றை 100 விவசாயிகள்

பயன்படுத்த முடியும். இம்முயற்சி மூலம் தரமான விதைகளை நாமே உற்பத்தி செய்ய முடியும். விதைகளை விலை கொடுத்து வாங்கும் அவசியம் இராது என்றார்.

முகாமிற்கு வேளாண் அலுவலர் பாபு தலைமை தாங்கினார். உதவி வேளாண் அலுவலர் திருக்குமரன், தண்டலம் ஊராட்சி மன்றத் தலைவர் பிரகாஷ், துணைத் தலைவர் தீனதயாளன், தண்டலம் ஏரிப்பாசன சங்கத் தலைவர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**மரபணு மாற்றப்பட்ட கத்திரிக்காய்க்கு தடை! கடும் எதிர்ப்புக்கு பணிந்தது மத்திய அரசு**
பிப்ரவரி 10,2010,00:00 IST



புதுடில்லி :மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காய்க்கு, நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்ததையடுத்து, மத்திய அரசு பணிந்தது. மரபணு கத்தரிக்காயை வர்த்தக ரீதியில் பயிரிடுவதற்கு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக, மேலும் ஆய்வு நடத்த அனுமதிக்கப்படும் என்றும் அரசு அறிவித்துள்ளது.

மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயை வர்த்தக ரீதியில் இந்தியாவில் பயிரிட, அனுமதி அளிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டது. இதற்கு நாடு முழுவதும் கடும் எதிர்ப்பு எழுந்தது.மரபணு மாற்றப்பட்ட கத்தரிக்காயில் பூச்சிகளை கொல்லும் நச்சுத்தன்மை அதிகம் இருப்பதாகவும், இதனால், இந்த கத்தரிக்காயை சாப்பிடுவோருக்கு பல்வேறு நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும், ஒரு தரப்பினர் கூறி வந்தனர். விவசாயிகள் மத்தியிலும் இதற்கு கடும் எதிர்ப்பு எழுந்தது.இருந்தாலும், அமெரிக்காவைச் சேர்ந்த மெஹைகோ - மான்சாண்டோ விதை நிறுவனங்கள் இதை மறுத்தன. இந்த கத்தரிக்காயை சாப்பிடும் மனிதர்களுக்கு எந்த பாதிப்பும் வராது என்றும், கத்தரிக்காய்க்கு எப்பூச்சி பாதிப்பும் வராது என்பது தான் சிறப்பு என்றும் தெரிவித்தன. கடும் எதிர்ப்பு தொடர்ந்ததை அடுத்து, இதுகுறித்து நாடு முழுவதும் சென்று கருத்துக் கேட்க, மத்திய அரசு முடிவு செய்தது. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், பல்வேறு மாநிலங்களுக்கு சென்று கருத்து கேட்டார். பல மாநிலங்களில் மரபணு கத்தரிக்காய்க்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து நேற்று முன்தினம் கொச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், "மரபணு கத்தரிக்காயை அறிமுகப்படுத்தும் விஷயத்தில், மத்திய அரசின் முடிவு, மக்களின் உணர்வுகளை எதிரொலிப்பதாக இருக்கும். மேற்கு வங்கம், ஒரிசா, ஆந்திரா, கர்நாடகா, கேரளா, ம.பி., மாநில முதல்வர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடிதம் எழுதியுள்ளனர். தமிழக அரசு தலைமைச் செயலரும் இதே கருத்தை தெரிவித்துள்ளார்' என்றார்.

இந்நிலையில், மரபணு கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக பயிரிடுவதற்கு அனுமதி அளிக்கப்படுமா என்பது குறித்து இன்று முடிவு எடுக்கப்படும் என, மத்திய அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் ஒரு நாள் முன்னதாக, நேற்றே இதற்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

டில்லியில் செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் நேற்று கூறியதாவது: மரபணு கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக பயிரிடுவதற்கு அனுமதி அளிக்கும் விஷயம் தொடர்பாக, விஞ்ஞானிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைப்புகளிடம் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. இது தொடர்பாக மேலும் விரிவான ஆய்வு நடத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.இதை அறிமுகப்படுத்துவதில் அவசரம் காட்ட வேண்டிய தேவையும் இல்லை. மக்களின் உணர்வுகள், இதற்கு எதிராக இருப்பதால், இதில் மிகுந்த கவனத்துடனும், முன் எச்சரிக்கையுடனும் செயல்பட வேண்டிய கடமை எனக்கு உள்ளது.சுதந்திரமாக நடத்தப்படும் ஆய்வின் மூலம், மரபணு கத்தரிக்காய் மிகவும் பாதுகாப்பானது என, மக்களுக்கு ஆழமான நம்பிக்கையை ஏற்படுத்தும் முடிவு வெளியாகும் வரை, இதை வர்த்தக ரீதியாக பயிரிடுவதற்கு அனுமதி அளிக்கப்படாது. அதுவரை தடை தொடரும்.சம்பந்தப்பட்ட கம்பெனிகள் தங்கள் ஆய்வுகளை மேலும் தீவிரப்படுத்தி, நன்மை குறித்து விளக்கலாம்.

விஞ்ஞானிகள் மற்றும் சமூகத்தின் பல்வேறு தரப்பினரின் விருப்பத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக, பார்லிமென்ட் மற்றும் தேசிய மேம்பாட்டு கவுன்சிலில் விரிவாக விவாதிக்க விரும்புகிறேன்.கடந்தாண்டு மே மாதம், சுற்றுச்சூழல் துறை அமைச்சராக பொறுப்பேற்றேன். அன்று முதல் இன்று வரை, மரபணு மாற்றப்பட்ட பயிர்களுடன் தொடர்புடைய எந்த ஒரு நிறுவனத்தின் பிரதிநிதியையும் நான் சந்திக்கவில்லை.தற்போது அறிவிக்கப்பட்டுள்ள முடிவு, மரபணு கத்தரிக்காய்க்கு மட்டுமே பொருந்தும். எதிர்காலத்தில், மரபணு மாற்றம் செய்யப்படும் மற்ற பயிர்களுக்கு பொருந்தாது.இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

அமைச்சரின் முடிவை காங்கிரஸ் வரவேற்றது. "மக்கள் உடல்நலன் மிக முக்கியம் என்ற அடிப்படையில் எடுக்கப்பட்ட இம்முடிவு வரவேற்கத்தக்கது' என்று காங்கிரஸ் தகவல் தொடர்பாளர் ஷகீல் அகமது தெரிவித்தார்.ஏற்கனவே பிடி கத்தரிக்காய்க்கு தடையை அறிவித்தது பா.ஜ., ஆளும் மாநில அரசுகள். இந்த விஷயத்தில் அரசு, பன்னாட்டு நிறுவனங்கள் பேச்சைக் கேட்டு அவசரப்பட்ட முடிவுகளை எடுத்து விடக்கூடாது என்றும் பா.ஜ., கருத்து தெரிவித்தது.மரபணு கத்தரிக்காய் கடந்த சிலநாட்களாக பெரும் அளவில் பேசப்பட்ட

விஷயம் ஆனது. அதை சிறந்த முறையில் கையாண்டு மக்கள் மனம் விரும்பும்படி முடிவை அறிவிப்பதாக ஏற்கனவே கூறிய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், நேற்று இந்த விஷயத்தில் அரசின் முடிவை ஆதாரங்களுடன் கூறி பல்வேறு தரப்பு வாதங்களுக்கும் முற்றுப்புள்ளி வைத்திருக்கிறார்.

### வேகமாக முன்னேறுகிறது இந்தியா : மத்திய புள்ளியியல் துறை தகவல்

பிப்ரவரி 10,2010,00:00 IST



சென்னை :"பொருளாதார மந்த நிலையிலிருந்து வேகமாக மீண்டுவரும் நாடுகளில் சீனாவை தொடர்ந்து இந்தியா, இரண்டாம் இடம் பிடித்துள்ளது. மத்திய புள்ளியியல் துறையின் ஆய்வுப்படி, கடந்த ஆண்டில் மட்டும் 6.7 சதவீத மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜி.டி.பி.,) வளர்ச்சியை இந்தியா பெற்றுள்ளது. வரும் ஆண்டில் இது 7.2 சதவீதமாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.
வருடத்தின் முதல்பாதியில் மந்தமாக காணப்படும் ஜி.டி.பி., வளர்ச்சி, வருடத்தின் பிற்பகுதியில் வேகமாக முன்னேற வாய்ப்புள்ளது' என, கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.கடந்த ஆண்டு விவசாயத் துறையில் வளர்ச்சி 1.6 சதவீத இழப்பும், நடப்பு வருடத்தில் இழப்பு 0.2 சதவீதமாகவும் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொருள் உற்பத்தி சார்ந்த தொழில்களில் கடந்த ஆண்டு 3.2 சதவீத வளர்ச்சியும், நடப்பு வருடம் 8.9 சதவீத வளர்ச்சியும் இருக்கும் என்று தெரிகிறது.ஏற்றுமதி, போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு உள்ளிட்ட துறைகளின் வளர்ச்சி 8.3 சதவீதமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்துறையில் 6.5 சதவீத வளர்ச்சியும், நிதியுதவி, இன்சூரன்ஸ், ரியல் எஸ்டேட் மற்றும் வியாபாரத் துறையில் 10.1 சதவீத வளர்ச்சியும் பெறும் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், சமூகம் மற்றும் தனிப்பட்ட மனிதர்களுக்கான செலவுகள் கடந்தாண்டு 13.9 சதவீதமாகவும், நடப்பு ஆண்டு 9.9 சதவீதமாகவும் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.கடந்த ஆண்டு உணவுப்பொருள் விலை ஏற்றத்திற்கு காரணம், பருவம் தவறி பெய்த மழையால், நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக உணவு தானியங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகள் உற்பத்தி பாதிப்படைந்ததே என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.மத்திய புள்ளியியல் துறையை தவிர்த்து, மத்திய நிதி அமைச்சகத்தின் ஆய்வின்படி நடப்பு ஆண்டு ஜி.டிபி., வளர்ச்சி 7.75 சதவீதமாகவும், ரிசர்வ் வங்கியின் ஆய்வுப்படி 7.5 சதவீதமாகவும் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தொடர்ந்து சரிகிறது சர்க்கரை, பருப்பு விலை: 'எங்களுக்கு எட்டவில்லை:' மக்கள் கவலை

பிப்ரவரி 10,2010,02:40



மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கை காரணமாக, சர்க்கரை, பருப்பு வகைகளின் விலை தொடர்ந்து சரிவை சந்தித்து வருகின்றன. வெளிநாட்டு சர்க்கரை வரத்து அதிகரித்துள்ளதால், அடுத்த சில நாட்களில் கிலோவிற்கு இரண்டு ரூபாய் வரை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

மக்கள் தங்கள் அன்றாட உணவுப் பொருட்களில் சர்க்கரை, பருப்பு மற்றும் எண்ணெய் வகைகளை அதிகளவில் பயன்படுத்தி வருகின்றனர். இவற்றின் விலை கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக தொடர்ந்து உயர்வதும், குறைவதுமாக, கண்ணாமூச்சி காட்டி வருவது, மக்களை கலக்கத்தில் ஆழ்த்தியுள்ளது. கடந்தாண்டில் சர்க்கரை விலை ஒரு கிலோ 47 ரூபாயை எட்டியது. தொடர்ந்து இனிப்பு வகைகளின் விலையும் உயர்ந்ததால், இனிப்பு பிரியர்கள் மிகுந்த வேதனைக்குள்ளாகினர். சர்க்கரை விலையுடன், பருப்பு வகைகளின் விலையும் உயர்ந்ததால், பல்வேறு தரப்பில் இருந்து, மத்திய, மாநில அரசுகளுக்கு எதிரான விமர்சனங்கள் எழுந்தன. தொடர்ந்து இரு அரசுகளும் விலையை குறைப்பதற்கான முயற்சியில் இறங்கியுள்ளன. இதன் பலனாக, தற்போது விலை குறையத் துவங்கியுள்ளது. இம்மாத துவக்கத்திலிருந்தே சர்க்கரை விலை சரிவை சந்தித்து வருகிறது. முண்டியம்பாக்கத்தில் இருந்து வரும் சர்க்கரை 100 கிலோ மூட்டை 3,850 ரூபாய்க்கும், நாயுடுபேட்டையில் இருந்து வரும் இரண்டாம் ரக சர்க்கரை மூட்டை 3,800 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. சில்லறைச் சந்தையில் சர்க்கரையின் விலை ஒரு கிலோ 42 மற்றும் 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சில கடைகளில் இன்னும் பழைய விலையில் 43 ரூபாய்க்கே இன்னும் கிடைக்கிறது.

சர்க்கரையை பொறுத்தவரையில் சர்வதேச அளவில், பிரேசில் நாட்டில் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. மழை காரணமாக, கரும்பு உற்பத்தி குறைந்தது. தற்போது நிலைமை மீண்டும் சரியாகிய நிலையில், பிரேசில் சர்க்கரை வரத்து அதிகரித்துள்ளது. நேற்றைய நிலவரப்படி பிரேசில் சர்க்கரை 50 கிலோ கொண்ட மூட்டை 1,900 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. சர்க்கரையை தொடர்து பருப்பு விலையும் சரிவை சந்தித்துள்ளது. துவரம்பருப்பு முதல்ரகம் 100 கிலோ மூட்டை விலை 7,000 லிருந்து 6,300 ஆகவும், பர்மா துவரம்பருப்பு 6,500 லிருந்து 5,800 ஆகவும், தான்சானியா துவரம்பருப்பு 5,800 லிருந்து 5,200ஆகவும், டர்கி ரகம் 4,500 லிருந்து 4,200 ஆகவும் குறைந்துள்ளது.

உளுந்தின் விலை 6,800 லிருந்து 6,200 ஆகவும், பர்மா உளுந்து 6,000 த்திலிருந்து 5,500 ஆகவும் குறைந்துள்ளது. மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களை தவிர மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம் உள்ளிட்ட பகுதிகளிலும் துவரம்பருப்பு மற்றும் உளுந்து அதிகளவில் விளைவிக்கப்படுவதால், வரத்து தொடர்ந்து அதிகரித்து,

விலையும் தொடர்ந்து சரிந்து வருகிறது. மேலும், பர்மா உள்ளிட்ட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதும் கூடுதல் காரணம்.

துவரம் பருப்பிற்கு இணையாக உயர்ந்து வந்த பாசிப்பருப்பின் விலையும் குறைந்துள்ளது. பாசிப்பருப்பு முதல்ரகம் 100 கிலோ மூட்டை 8,200 லிருந்து 7,800 ஆகவும், இரண்டாம் ரகம், 7,800லிருந்து 7,400 ரூபாயாகவும் குறைந்துள்ளது. சீனாவில் இருந்து அதிகளவு பாசிப்பருப்பு இறக்குமதி செய்யப்பட்டு வருவதால், தொடர்ந்து விலை குறைந்து வருகிறது.

மும்பை கடலை பருப்பு முதல் ரகம் 50 கிலோ மூட்டை 1,650 லிருந்து 1,450 ஆகவும், இரண்டாம் ரகம் 1,550 லிருந்து 1,350 ரூபாய் ஆகவும் குறைந்துள்ளது. சாதா கடலைபருப்பு 100 கிலோ 2,900 த்திலிருந்து 2,600க்கு குறைந்துள்ளது. சில்லறை சந்தையில், 40 ரூபாய்க்கு விற்கப்பட்ட கடலைப் பருப்பு, 30,32 ரூபாய்க்கு குறைந்துள்ளது. அரியானா, டில்லி மாநிலங்களில் மட்டும் விளைவிக்கப்பட்ட கடலைப்பருப்பு குஜராத், மத்தியபிரேதசம் உள்ளிட்ட மாநிலங்களிலும் அதிகளவு உற்பத்தி செய்யப்பட்டதால், விலை குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. சர்க்கரை, பருப்பை தொடர்ந்து வெல்லம், மிளகாய், தனியா, பூண்டு, புளி ஆகியவற்றின் விலையும் சரிந்துள்ளது.

இதுகுறித்து, தமிழ்நாடு அனைத்து மளிகை பொருள் வியாபாரிகள் சங்க தலைவர் சொரூபன் கூறும் போது, "மத்திய அரசின் ஆலைகளுக்கான சர்க்கரை விற்பனை ஒதுக்கீடு, தென் மாநிலங்களில் குறைக்கப்பட்டுள்ளது. இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, விற்கப்படுவதால் சர்க்கரை விலை குறைந்து வருகிறது. தொடர்ந்து சர்க்கரை வரத்து அதிகரித்துள்ளதால், இன்னும் மூட்டைக்கு 100 முதல் 200 ரூபாய் வரையில் விலை குறைய வாய்ப்புள்ளது. பருப்பு, எண்ணெய் விலை குறைந்தாலும் காரம், இனிப்பு வகைகளின் விலை இன்னும் குறைக்கப்படவில்லை," என்றார்.

சர்க்கரை, பருப்பு உள்ளிட்ட பொருட்களின் மொத்த சந்தை விலை குறைந்தாலும், பொதுமக்கள் நேரடியாக அணுகும் சில்லறை விற்பனை கடைகளில் இன்னும் குறைந்த பாடில்லை. துவரம்பருப்பு ஒரு கிலோ முதல் ரகம் 65 ரூபாய் அளவிற்கு குறைந்த பின்னரும் 85 ரூபாய் வரையில் விற்கப்படுகிறது. இதனால், மத்திய, மாநில அரசுகளின் நடவடிக்கை என்பது மக்களுக்கு எட்டவில்லை. இப்பிரச்னையை தீர்க்க கடும் நடவடிக்கை தேவை என பொதுமக்கள் விரும்புகின்றனர்.

## தொழில்துறைகளுக்கு ஊக்க சலுகை: பட்ஜெட்டில் திரும்பப்பெற வாய்ப்பு

பிப்ரவரி 10,2010,02:40



புதுடில்லி: 'உலகப் பொருளாதார மந்த நிலையை சமாளிக்க, தொழில்துறைகளுக்கு வழங்கப்பட்ட பல்வேறு ஊக்கச் சலுகைகள், வரும் பட்ஜெட்டில் திரும்ப பெறப்படலாம்' என, பிரதமரின் பொருளாதார ஆலோசகர் சி.ரங்கராஜன் தெரிவித்தார். உலகப் பொருளாதார மந்த நிலையை சமாளிக்க, தொழில் துறைகளுக்கு உதவும் நோக்கில், வரிக்குறைப்பு, பொது செலவினத்தை அதிகரித்தல் உட்பட பல்வேறு ஊக்கச் சலுகைகளை அரசு அறிவித்தது.

இதனால், 1.68 லட்சம் கோடி ரூபாய் அளவிற்கு அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது. தற்போது, நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.2 சதவீதம் வளர்ச்சி அடையலாம் என கணக்கிடப்பட்டதால், அரசின் ஊக்கச் சலுகைகளை குறைக்கலாம் என்று சிலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

பிரதமரின் பொருளாதார ஆலோசனை கவுன்சில் தலைவர் சி.ரங்கராஜன் கூறியதாவது: இந்த நிதியாண்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சி, 7.2 சதவீதமாக இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. இது, நாட்டின் வலுவான பொருளாதார வளர்ச்சியையே காட்டுகிறது. எனவே, நிதியை பலப்படுத்தும் நடவடிக்கைகள் துவங்கப்பட வேண்டும். இதற்காக தொழில்துறைகளுக்கு வழங்கப்பட்ட ஊக்கச் சலுகைகள் திரும்ப பெறுதல் போன்ற நடவடிக்கைகள் வரும் பட்ஜெட்டில் எடுக்கப்படலாம். இவ்வாறு ரங்கராஜன் கூறினார்.

### பி.டி., கத்தரிக்காய் எதிர்த்து மறியல் : திருப்பதியில் போக்குவரத்து பாதிப்பு

பிப்ரவரி 10,2010,00:00 IST

நகரி : இந்தியாவிற்கு பி.டி., கத்தரிக்காய் இறங்குமதி செய்வதை எதிர்த்து, திருப்பதியில் அனைத்து கட்சி சார்பில், ஊர்வலம், சாலை மறியல் மற்றும் போராட்டம் நடந்தது.

ஆந்திர மாநில விவசாய சங்கத்தின் சார்பில், திருப்பதியில் நடந்த மறியல் போராட்டத்தில், தெலுங்குதேசம், பி.ஆர்.பி., - சி.பி.ஐ., - சி.பி.எம்., ஆகிய கட்சிகளின் முக்கிய தலைவர்கள், திருப்பதி நகராட்சி அலுவலகம் அருகிலிருந்து, நான்கு கால் மண்டபம் வரை, ஊர்வலமாக வந்தனர். காந்தி சாலையில் அமர்ந்து, "மத்திய அரசு, உலக வங்கியின் வற்புறுத்தலுக்கு இணங்கி, மக்களின் நலனுக்கு கேடு விளைவிக்கும் பி.டி., கத்தரிக்காயை, மார்கெட்டில் விற்பனைக்கு கொண்டு வர முயற்சிப்பது கண்டிக்கதக்கது' என, அனைத்துக் கட்சியினர், மத்திய அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பினர். இதனால், திருப்பதியில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### எருமைக்கு 'குட் பை' : பராமரிப்பில் ஏகப்பட்ட சிக்கலாம்! பசு வளர்ப்புக்கு மாறும் விவசாயிகள்

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் தீவன விலை, கட்டுபடியாகாத பால் கொள்முதல் விலை, பராமரிப்பில் ஏற்படும் சிரமங்கள் உள்ளிட்ட காரணங் களால், கோவை புறநகரில் எருமை வளர்ப்பு வெகுவாக குறைந்துவிட்டது.

கோவையில், ஆண்டு தோறும் பருவமழை பொழிவு குறைந்து வருகிறது. வயலில் விதை விதைக்க, தண்ணீர் பாய்ச்ச, களை எடுக்க, அறுவடை செய்ய என விவசாய பணிக்கு போதுமான தொழிலாளர்கள் கிடைப்பதில்லை. உரம், பூச்சி மருந்து விலை உயர்ந்த அளவுக்கு, விளைபொருட்களுக்கு கட்டுபடியாகும் விலை கிடைப்பதில்லை. இதனால், பெரும்பாலான விவசாயிகள் கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துகின்றனர். ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடை வளர்ப்பு, விவசாயிகளுக்கு முக்கிய வாழ்வாதாரமாக உள்ளது. அன்னூர், கோவில்பாளையம், காரமடை, பெரியநாயக்கன்பாளையம், தொண்டாமுத்தூர் உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் பசு, எருமை கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. பால்காரர்கள் தோட்டத் துக்கு சென்று பால் கறந்து எடுத்துச் செல்கின்றனர். வாரம் ஒரு முறை அதற்கான பணத்தை விவசாயிகளுக்கு தருகின்றனர். சில விவசாயிகள், தாங்களே கறந்து ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தனியார் பால் நிறுவனத்திற்கும் விற்கின்றனர்.

கோவை புறநகரில், சமீப ஆண்டுகளாக எருமை வளர்ப்பு எண்ணிக்கை பல்வேறு காரணங்களால் குறைந்து வருகிறது. அன்னூர் வட்டாரத்தில் கடந்த 2005ல் 12 ஆயிரம் எருமைகள் வளர்க்கப்பட்டன; தற்போது இதன் எண்ணிக்கை 2,000மாக குறைந்து விட்டது. இதே போன்றே, மாவட்டத்தின் பிற கிராம புறங்களிலும் எருமை வளர்ப்பு குறைந்து வருகிறது. இது குறித்து, சாளையூரைச் சேர்ந்த விவசாயி திருமூர்த்தி கூறியதாவது: சாளையூரில் கராச்சி இன எருமை வளர்க்கப்படுகிறது. பசு மாடுகள் தினமும் சராசரியாக 15 லி.,வரை பால் தருகின்றன. ஆனால்,

எருமைகள் எட்டு முதல் 10 லி.,வரை மட்டுமே கறக்கின்றன. தோட்டத்தில் எருமைகளுக்காக விளைவிக்கப்படும் சோளத்தட்டை வெட்டி, அடுக்க தினக்கூலியாக 300 ரூபாய் தர வேண்டி உள்ளது. வெளியில் வாங்கும் தீவனங்களின் விலை பல மடங்கு உயர்ந்து விட்டது. எருமை சினை பிடிக்க ஜோடி கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிறது. ஒரு சினை ஊசிக்கு 100 ரூபாய் கட்டணம் தர வேண்டியுள்ளது. ஆனாலும், எளிதில் சினை பிடிப்பதில்லை.

குடும்பத்தில் ஏதாவது பிரச்னை அல்லது நல்ல விஷயங்களுக்கு ஜோதிடரிடம் சென்றால், "வீட்டில் கறுப்பு ஆகாது' என்று கூறுகின்றனர். எருமைகளை வெயிலில் கட்டி வைத்து பராமரிக்க முடியாது. பச்சைத் தீவனம் தர வேண்டியுள்ளது. காய்ந்த தீவனம் தர முடியாது. பசு மாடு சினை பிடித்தால் ஏழு மாதம் வரை பால் கறக்க முடியும். ஆனால், எருமை மாடு சினை பிடித்தால் மூன்று மாதம் வரை மட்டுமே பால் கறக்க முடியும். மேலும் கன்றுக்குட்டி இல்லாமல் எருமையிடம் பால் கறப்பது மிகவும் சிரமம். பசு மாட்டை விட எருமை அதிக தீவனம் சாப்பிடுகிறது.மேலும், இதற்கான மேய்ச்சல் நிலப்பரப்பும் குறைந்து விட்டது. பால் கொள்முதல் விலை செலவுக்கேற்ப உயரவில்லை. இதனால், மூன்று ஆண்டுகளில் அன்னூர் பகுதியில் இருந்த 12 ஆயிரம் எருமைகள் வெறும் 2,000 ஆக குறைந்து விட்டது. எருமைக்கு பதிலாக பசு மாடு வளர்க்க பலரும் மாறிவிட்டனர்.நூற்றுக்கணக்கான விவசாயிகள் தாங்கள் வளர்த்து வந்த எருமைகளை வியாபாரிகளிடம் கேரளா கொண்டு செல்ல விற்று விட்டனர். எருமை வளர்ப்பு இதனால் குறைந்து விட்டது. இவ்வாறு, திருமூர்த்தி தெரிவித்தார்.

"ஆவின்' பால் சொசைட்டி நிர்வாகிகள் கூறுகையில், "கடந்த சில ஆண்டுகளாக எருமைப்பால் வரத்து மிகவும் குறைந்து விட்டது. 50 சதவீத சொசைட்டிகளில் ஒரு லிட்டர் கூட எருமைப்பால் வரத்து இல்லை' என்றனர்.எருமை வளர்ப்பு குறைந்ததால் சாணத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட் டுள்ளது. இதனால், மானியம் மூலம் விவசாயிகள் தங்களது தோட்டங்களில் அமைத்த சாண எரிவாயு கலன் பல இடங்களில் பயன்படுத்தாமல் துருப்பிடித்து கிடக்கிறது. கிராமப்புற பொருளாதாரத்தின் முக்கிய ஆதாரமான கால்நடை வளர்ப்பு தொழில் தொய்வடையாமல் இருக்க, பருத்திக்கொட்டை, புண்ணாக்கு உள்ளிட்ட கால்நடைகளுக்கான ஜீவாதார தீவனங்களின் விலையை கட்டுப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

**- நமது நிருபர் -**

**நிலக்கடலை விற்க நல்ல நேரம்! விவசாயிகளுக்கு பல்கலை அறிவுரை**

கோவை : "நடப்பு மாதம் முதல் வரும் ஏப்ரல் வரை நிலக்கடலை விலை குவிண்டாலுக்கு 2,900 முதல் 3,100 ரூபாய் வரை உயர வாய்ப்புள்ளது. இதனால், இருப்பு வைத்துள்ள நிலக்கடலையை உடனே விற்று விவசாயிகள் லாபம் பெறலாம்' என, கோவை வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.

**வேளாண் பல்கலை அறிக்கை:** இந்தியாவின் முக்கிய எண்ணெய் வித்து பயிரான நிலக்கடலையின் விலை, கடந்த ஓராண்டாக தேக்கநிலையை சந்தித்து வந்துள்ளது. குவிண்டாலுக்கு 2,300 ரூபாயில் இருந்து 3,000 ரூபாயாக விலை இருந்தது. கடந்த 2008-09 ல் 42.2 லட்சம் "டன்'னாக இருந்த நிலக்கடலை உற்பத்தி, 2009-10ல் 32.9 லட்சம் டன்னாக 20 சதவீதம் வரை குறைந்துள்ளது. குஜராத்தில் அதிக நிலக்கடலை உற்பத்தியாகிறது. கடந்த 2008-09ல் 18 லட்சம் ஹெக்டரில் பயிரிடப்பட்டது. இது, 2009-10ல் 16.35 லட்சம் ஹெக்டராக குறைந்து விட்டது. பருவம் தவறிய மழை, விவசாயிகள் பருத்திக்கு மாறியது ஆகியவை உற்பத்தி சரிவுக்கு காரணங்கள். இந்திய அளவிலும் 53 லட்சம் ஹெக்டராக இருந்த இதன் சாகுபடி பரப்பு, 2009-10ல் 44 லட்சம் ஹெக்டராக குறைந்து விட்டது.

தமிழகத்தில் சுமார் ஐந்து லட்சம் ஹெக்டரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. இது தேசிய அளவில் 16 சதவீதம். இந்த ஆண்டு மழை பற்றாக்குறை, விவசாய வேலையாட்கள் பற்றாக்குறை, விவசாயிகள் மக்காச்சோளத்துக்கு மாறியது ஆகியவற்றால் நிலக்கடலை சாகுபடி குறைந்து விட்டது. குறைந்து விட்ட உற்பத்தி,

அதிகரித்துள்ள தேவை, மாற்று உணவு எண்ணெய்களின் இறக்குமதி போன்ற காரணங்களால், நல்ல விலை கிடைக்கும் வரை இருப்பில் உள்ள நிலக்கடலையை விற்காமல் வைத்திருக்கலாமா, என விவசாயிகள் குழம்புகின்றனர்.

கோவை வேளாண் பல்கலையில் உள்ள வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம் மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையத்தில் இதற்கான ஆய்வு நடத்தப்பட்டது. நிலக்கடலையின் முக்கிய சந்தையான சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கடந்த 15 ஆண்டுகளின் விலை தகவல் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஆய்வு தகவலின்படி, கடந்த ஆண்டை ஒப்பிடும்போது, குறைந்துள்ள நிலக்கடலை சாகுபடி பரப்பு, விலை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. உலகளவில் பனை எண்ணெய் உற்பத்தி குறைய வாய்ப்புகள் இருந்தாலும், அதை சோயாவின் அதிக உற்பத்தி ஈடுகட்டும்.

பனை எண்ணெய் கையிருப்பு, பருத்தி மற்றும் நெல் உமி எண்ணெய்களின் உபயோகம் ஆகியவை, நிலக்கடலை விலையை ஏற விடாது. ஆகவே, உடைக்காத நிலக்கடலையின் பண்ணை விலை, பிப்., முதல் ஏப்., வரை குவிண்டாலுக்கு 2,900 ரூபாய் முதல் 3,100 ரூபாய் வரை கிடைக்கும். மே, ஜூன் மாதங்களில் 100 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை குவிண்டாலுக்கு அதிகரிக்க வாய்ப்புள்ளது. நிலக்கடலை பருப்பிலும் இதே போக்குதான் காணப்படும். மத்திய அரசு, பனை எண்ணெய்க்கு இறக்குமதி வரி விதித்தால், விலை சற்று உயர வாய்ப்புள்ளது; பனை எண்ணெய் இறக்குமதி செய்தால் விலை சரிய வாய்ப்புள்ளது. எனவே, விவசாயிகள் தங்களிடம் உள்ள நிலக்கடலையை உடனே விற்று லாபம் அடையலாம். இவ்வாறு, வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.

**கால்நடை மருத்துவமனையில் 'மாதிரி தீவன விளக்க பாத்தியல்'**

பொள்ளாச்சி : பொள்ளாச்சி கோட்டத்திலுள்ள கால்நடை மருத்துவமனைகளில், "மாதிரி தீவன விளக்க பாத்தியல்' அமைக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி கோட்ட கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் டாக்டர் நாகராஜன் கூறியதாவது: கால்நடை வளர்க்கும் விவசாயிகள், சுயமாக பசுந்தீவனம் வளர்த்து கால்நடைகளுக்கு வழங்க வேண்டும் என்கிற நோக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக, பொள்ளாச்சி கோட்டத்திலுள்ள முக்கிய கால்நடை மருத்துவமனைகளில், சிறிய அளவில் பாத்தி அமைத்து, பசுந்தீவனம் அமைக்கப்படுகிறது. இதற்கு "மாதிரி தீவன விளக்க பாத்தியல்' என பெயரிடப்பட்டுள்ளது.

பாத்தியில், கோ.4, வேலி மசால், குதிரை மசால், கிளரிசீடியா, ஏ.டி.மைஸ் ஆகிய வகை பசுந்தீவனம் வளர்க்கப்படுகிறது. முதல்கட்டமாக, வடசித்தூர், கிணத்துக்கடவு, காட்டம்பட்டி, புரவிபாளையம், நெகமம், பொள்ளாச்சி ஆகிய பகுதிகளிலுள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் "மாதிரி தீவன விளக்க பாத்தியல்' அமைக்கப்பட்டுள்ளது. மருத்துவமனை வளாகத்திற்கு வரும் விவசாயிகளுக்கு, இதை அடிப்படையாக கொண்டு பசுந்தீவன வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. இரண்டாம் கட்டமாக, மலையாண்டிபட்டணம், மாரப்பக்கவுண்டன்புதூர் ஆகிய பகுதிகளிலுள்ள கால்நடை கிளை மருத்துவமனைகளில் "மாதிரி தீவன விளக்க பாத்தியல்' அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு, கால்நடைத்துறை உதவி இயக்குனர் நாகராஜன் கூறினார்.

**ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நெல் மூட்டைகள் வரத்து அதிகரிப்பு**

கடலூர் : கடலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் உரிய விலை கிடைப்பதால் நெல் வரத்து அதிகரித்துள்ளது. கடலூர் சுற்று வட்டார பகுதிகளில் நெல் அறுவடை துவங்கியுள்ளது. அறுவடை செய்யும் நெல்லை விவசாயிகள் முதுநகரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூடத் திற்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இவ்வாறு விவசாயிகள் கொண்டு வரும் நெல்லை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் விவசாயிகள் தரத்திற்கு ஏற்ப விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய் கின்றனர். நேற்று 1,250 நெல் மூட்டைகள் விற்பனைக்கு வந்தன. அதில் பொன்னி 802 முதல் 936 ரூபாயும், பொன்மணி 657 முதல் 703 ரூபாயும், ஏ.டி.டி.39 ரகம் 752 முதல் 759 ரூபாயும், சின்னபொன்னி 761 ரூபாய், பி.பி.டி.ரகம் 922 ரூபாய், ஐ.ஆர்.50-757 ரூபாயிற்கு விலை

போனது.விவசாயிகள் எதிர்பார்க் கும் விலை கிடைப்பதால் நெல் வரத்து அதிகரித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**இயற்கை உரத்திற்காக இடம் மாறும் கால்நடைகள்**

சிறுபாக்கம் : சிறுபாக்கம் அருகே இயற்கை உரத்திற்காக ஆடு, மாடு மந்தைகளை விளைநிலத்தில் பட்டி போட பணம் கொடுத்து விவசாயிகள் அனுமதிக்கின்றனர்.

சிறுபாக்கம் அடுத்த மங் களூர், மலையனூர், பனையாந்தூர், ஒரங்கூர் மற்றும் வேப்பூர் அடுத்த பெரியநெசலூர், நல்லூர், அரியநாச்சி, கழுதூர் உள்ளிட்ட இருநூறுக்கும் மேற்பட்ட கிராம மக்கள் விவசாய தொழிலையே பிரதானமாக செய்து வருகிறனர்.சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்களின் நீர்ப்பாசன மற்றும் மானாவாரி நிலங்களில் பயிர் செய் துள்ள மணிலா, பருத்தி, நெல், மரவள்ளி உள்ளிட்ட பல்வேறு வகையான பயிர்களை தற்போது அறுவடை செய்து வருகின்றனர்.அறுவடைக்கு பின் காலியான நிலங்களில் பக்க விளைவுகள் இல் லாத தரமான இயற்கை உரத்தினை இடுவதன் மூலம் விளைபொருட்கள் நல்ல மகசூல் கிடைக்கும். இதற்காக ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் ராமநாதபுரம், நெல்லை, தூத்துக்குடி பகுதிகளிலிருந்து செம்மறி ஆடு மற்றும் மாடு மந்தைகள் இப்பகுதிகளில் முகாமிடுவது வழக்கம். இவர்களிடம் நாள் ஒன்றுக்கு ஆட்டு மந்தைக்கு 400 ரூபாயும், மாட்டு மந்தைக்கு 600 ரூபாய் என விலை நிர்ணயிக்கின்றனர்.இதனையடுத்து வியாபாரிகள் குடும்பத்துடன் தற்காலிக குடில் அமைத்து விவசாயிகளின் விளைநிலங்களில் ஆடு, மாடு மந்தை பட்டி அமைத்து இயற்கை உரத்திற்கு வழி செய்கின்றனர்.

**பண்ருட்டியில் எண்ணெய் பனை தோப்புகளை வேளாண் கூடுதல் இயக்குனர் மதுமதி ஆய்வு**

பண்ருட்டி : பண்ருட்டி பகுதியில் பயிரடப்பட் டுள்ள பயிர் மற்றும் எண்ணெய் பனை தோப்புகளை வேளாண் துறை கூடுதல் இயக்குனர் மதுமதி ஆய்வு செய்தார்.பண்ருட்டி வேளாண் வட்டார பகுதியான வையாபுரிபட்டினம், கட்டியம்பாளையம் கிராமங்களில் பயிரிட்டுள்ள விளை நிலங்களை வேளாண் துறை கூடுதல் இயக்குனர் மதுமதி ஆய்வு செய்தார். அப்போது பயிறு வகைகள் உற்பத்தியில் தன்னிறைவு அடைய உளுந்து, துவரை பயிரை தனிப் பயிராகவும், கரும்பு, சவுக்கு, மணிலா, மரவள்ளி பயிரில் ஊடுபயிராகவும் பயிரிட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.வையாபுரிபட்டினத்தில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் விதைப்பு செய்த தனிப்பயிர் உளுந்து விதைப் பண்ணைகளையும், கட்டியம்பாளையம் கிராமத்தில் ஐசோபாம் எண்ணெய் பனை பெருக்கு திட்டத்தில் அறுவடைக்கு தயாராக உள்ள பனை தோப்புகள், கரும்பில் ஊடுபயிராக விதைப்பு செய்த உளுந்து பயிரை ஆய்வு செய்தார்.இதில் வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன், துணை இயக்குனர்கள் பாபு, ராதாகிருஷ்ணன், உதவி இயக்குனர்கள் ஹரிதாஸ், தரக்கட்டுபாடு உதவி இயக்குனர் சுந்தர்ராஜன், இணை இயக்குனர்கள் விஷ்ணுராம்மேத்தி, மலர்வண் ணன், ரவிசேகர் உடனிருந்தனர்.

**பின்னத்தூரில் நெல் அறுவடை பிரச்னை : அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் தீர்வு**

கிள்ளை : அதிகாரிகளின் சமரச முயற்சியினால் பின்னத்தூரில் நெல் அறுவடை பணி நேற்று துவங்கியது.

சிதம்பரம் அடுத்த பின்னத்தூரில் நெல் பயிரை இயந்திரம் மூலம் அறுவடை செய்ய கொடிப்பள்ளம் காலனியை சேர்ந்தவர்கள் எதிர்ப்பு தெரிவித்து கடந்த 4ம் தேதி சாலை மறியல் செய்தனர். அதிகாரிகள் பேச்சுவார்த் தையை தொடர்ந்து மறுநாள் அறுவடை துவங்கியபோது கொடிப் பள் ளம் காலனியை சேர்ந்தவர்கள் அறுவடை செய்த இயந்திரத்தை சேதப்படுத்தியதுடன், டிரைவர்களையும் தாக்கினர். இதனால் அப்பகுதியில் பதற்றம் நிலவியது. இருகிராமத்திலும் போலீசார் குவிக்கப்பட்டனர்.இது தொடர்பாக சிதம்பரம் ஆர்.டி.ஓ., (பொறுப்பு) செல்வராஜ், தாசில்தார் காமராஜ், டி.எஸ்.பி., மூவேந்தன் முன்னிலையில் பேச்சுவார்த்தை நடந்தது. விவசாய சங்க தலைவர் ராஜாராமன், மாவட்ட கவுன்சிலர் நல்லத்தம்பி, த.மு.மு.க., மாநில துணை செயலாளர் ஜின்னா, அமீர்பாஷா,

பின்னத்தூர் ஜமாத் நிர்வாகிகள் முகம்மது ஜக்கரியா, முகம்மது அயூப், கொடிப்பள்ளம் முக்கியஸ்தர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில், அறுவடை உள்ள நாட்கள் வரை கூலியாட்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். விவசாயி பாதிக்காத வகையில் முற்றிய நெற்கதிர்களை இயந்திரம் மூலம் அறுவடை செய்ய வேண்டும் என அதிகாரிகள் கூறினர். அதனை இருதரப்பினரும் ஏற்றுக் கொண்டதை தொடர்ந்து நேற்று முதல் கூலியாட் கள் மற்றும் இயந்திரம் மூலம் தனித் தனியாக நெல் அறுவடை பணி துவங்கியது.

**விருத்தாசலத்தில் பாசனப்பகுதி மேன்மை நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம்**

விருத்தாசலம் : விருத்தாசலத்தில் வேளாண் பொறியியல் துறை சார்பில் பாசனப்பகுதி மேன்மை மற் றும் நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம் நடந்தது.விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் நடந்த பயிலரங்கத்திற்கு வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ரங்கராஜ் தலைமை தாங்கினார். திட்டக்குடி உதவி செயற்பொறியாளர் நடேசன் முன்னிலை வகித்தார்.பாசன பகுதிகளை மேன்மை படுத்துதலில் தொழில் நுட்ப முறைகள் குறித்து பொதுப்பணி துறை செயற்பொறியாளர் செல்வகுமார், பாசன பகுதி மேன்மை இளநிலை பொறியாளர் முருகேசன், இயந்திர கலப்பை பணிமனை உதவி பொறியாளர் விஜயகுமார், வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் சாத்தையா, வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் பத்மநாபன், உதவி பேராசிரியர்கள் ரஜூ, ஹரிப்பிரியா ஆகியோர் பேசினர்.பாசன சபை தலைவர்கள் வேணுகோபால், ராஜசேகர், தமிழரசன், மருதாசலம், பொன்னுசாமி, ரவீந்திரன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.இளநிலை பொறியாளர் அரவிந்தன் நன்றி கூறினார்.

**விவசாய தகவல் குழு ஆலோசனைக் கூட்டம்**

சிறுபாக்கம் : நல்லூர் ஒன்றிய வேளாண் வளர்ச்சி அலுவலகத்தில் விவசாய தகவல் (ஆத்மா) மற்றும் ஆலோசனை குழு உறுப்பினர்கள் கூட்டம் நடந்தது.வேளாண் உதவி இயக் குனர் அப்பன்ராஜ் முன் னிலை வகித்தார். தோட் டக்கலை அலுவலர் ஆறுமுகம் வரவேற்றார்.உறுப்பினர்கள் தங்கதுரை, சக்திவிநாயகம், அண்ணாமலை, ஜெயந்தி, சங்கர், அம்பிகா, ஜெயராமன், வேளாண் அலுவலர்கள் இளவரசன், கங்கைமணி, கால்நடை மருத்துவர் தில்லைகோவிந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.கூட்டத்தில் ஒன்றியத் தில் 50 விவசாயிகளை தேர்வு செய்து நாமக்கல், ஈச்சங்கோட்டை உள் ளிட்ட பகுதிகளில் கால் நடை வளர்ப்பு குறித்து பயிற்சி அளிக்கவும், தோட் டக்கலை பயிர்களான வாழை, மிளகாய் உள் ளிட்ட பயிர்களுக்கு மானியம் வழங்கி ஊக்குவிக்கவும், சொட்டு நீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குவது, சிறப்பு கட்டணத்தில் மண், நீர் பரிசோதனை செய்திடுவது குறித்து கலந்தாய்வு நடத் தப்பட்டது. கூட்டத்திற்கு தலைமை தாங்கிய குழு தலைவர் பாவாடை கோவிந்தசாமி பேசுகையில், மாவட் டத்தில் பின்தங்கிய நல் லூர் ஒன்றியத்திற்கு அரசு ஒதுக்கியுள்ள விவசாய மானியங்கள் நலத்திட்ட உதவிகளை வேளாண் அலுவலர்கள் தங்களின் களப்பகுதிகளுக்கு சென்று திட்ட பயன்களையும், வேளாண் குறித்த சந்தேகங்களையும் விளக்கி செயலாற்ற வேண் டும் என வலியுறுத்தினார்.

**சத்தியில் செண்டுமல்லி சாகுபடி அதிகரிப்பு ஆயிலாக மாற்றி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி**

சத்தியமங்கலம்: சத்தி பகுதியில் செண்டுமல்லி சாகுபடி அதிகரித்துள்ளது. இங்குள்ள ஆலை மூலம் ஆயிலாக மாற்றி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள் வாழை, மஞ்சள், கரும்பு உள்ளிட்ட ஆண்டுப்பயிரை சாகுபடி செய்து வந்தனர். விவசாயிகள் ஆண்டு முழுவதும் பராமரிப்பு செலவு செய்த பின் ஓராண்டு கழித்து வருமானம் கொடுக்கும். இதனால், விவசாயிகள் இடைக்காலங்களில் வருமானம் பெற, மாற்றுப் பயிர்களை சாகுபடி செய்கின்றனர். தற்போது விவசாயிகள் அதிகம் தேர்வு செய்துள்ள பயிர் செண்டுமல்லி. செண்டு மல்லி விதைத்து 20 நாட்களில் நாற்று வளர்ந்து விடும். வளர்ந்த நாற்றுக்களை ஒரு ஏக்கருக்கு 18 ஆயிரம் நாற்றுகளாக பிரித்து நடவு செய்ய வேண்டும். நடவு செய்யப்பட்ட 60 நாட்களில் பூப்பிடித்து பலன்கொடுக்க

துவங்கி விடும். பின்னர் நூறு நாட்கள் வரை தொடர்ந்து பலன் கொடுக்கும். கோடைகாலங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 15 டன் முதல் 20 டன் வரை மகசூல் கொடுக்கிறது. குளிர் காலங்களில் செடி சிறுத்து ஏக்கர் ஒன்றுக்கு எட்டு முதல் பத்து டன் வரை மகசூல் கொடுக்கிறது.
சத்தியமங்கலம் புதுவடவள்ளியில் உள்ள "ஏ.வி.டி., செண்டுமல்லி' நிறுவனத்தினர், செண்டுமல்லியை மொத்தமாக கொள்முதல் செய்து, அதை பதப்படுத்தி, ஆயிலாக மாற்றி அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புகின்றனர்.செண்டுமல்லியின் பவுடர், மருந்து தயாரிக்க உதவுகிறது. இதன்மூலம் தயாரிக்கப்படும் மாத்திரை கண் பாதிப்பை குணமாக்குகிறது. மேலும் செண்டுமல்லியை பொடியாக்கி அதை கோழித்தீவனத்தில் கலந்தால், கோழியின் முட்டை மஞ்சள் கரு அடர்த்தியாக உள்ளதாகவும், கோழி இறைச்சி மஞ்சள் தடவியதுபோல் மாறுவதால், இதை இறைச்சி பிரியர்கள் விரும்புவதாகவும் கூறுகின்றனர். கர்நாடகா மாநிலத்தில் நடக்கும் அனைத்து விழாக்களுக்கும் முக்கிய பூவாக செண்டுமல்லி கருதப்படுகிறது. இதனால், கர்நாடகா வியாபாரிகளும் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர். தற்போது கிலோ ஒன்று நான்கு முதல் எட்டு ரூபாய் வரை விற்பனையாகிறது. ஏக்கர் ஒன்றுக்கு பராமரிப்பு செலவாக பத்தாயிரம் முதல் 12 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. சத்தியமங்கலம் பகுதியில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் செண்டுமல்லி பயிரிடப்பட்டுள்ளது.

**இடநெருக்கடியில் ஈரோடு மஞ்சள் விற்பனை கூடம்**

ஈரோடு: இட நெருக்கடியில் தவிக்கும் ஈரோடு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு சொந்த கட்டிடம் இல்லாததால், அரசு நிர்ணயித்துள்ள குறைவான வாடகையில் மாற்று இடம் அமைத்துக்கொள்ள அதிகாரிகள் முயன்று வருகின்றனர்.
வெளிச்சந்தை வியாபாரிகளோடு போட்டியிட்டு, விளை பொருளுக்கு உரிய விலையை விவசாயிகளுக்கு பெற்றுத்தரும் நோக்கில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் அரசால் துவக்கப்பட்டன. தமிழகத்தில் மாவட்டம் தோறும் 40 ஆண்டுகளுக்கு முன் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் துவக்கப்பட்டன. விவசாயிகளின் விளை பொருளுக்கு நல்ல விலை கிடைக்கும் வரை, அதை பாதுகாத்து வைத்திருக்க கிடங்குகளும் அருகே உள்ளன. ஈரோடு மாவட்டத்தில் விளை பொருட்களை விற்று விவசாயிகள் பயனடையும் வகையில, மாவட்டத்தில் 25 இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் உள்ளன. மாவட்ட விற்பனைக்குழு கட்டுப்பாட்டில் செயல்படும் இவற்றில் பலவும் பல ஆண்டுகளாக வாடகை கட்டிடத்தில்தான் இயங்குகின்றன. ஈரோடு நகரின் மையப்பகுதியில் செயல்பட்டு வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 40 ஆண்டுகளாக தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. அலுவலகத்தின் நுழைவு பகுதியில் கண்காணிப்பாளர் அறையும், மேற்பார்வையாளர் அறை, அமைச்சுப்பணியாளர் அறை, எடையாளர் அறை உள்ளன. அலுவலகத்தின் வடபுறம் மஞ்சள் குடோன் உள்ளது. இடப்பற்றாக்குறையான இக்கட்டிடத்தில், சரியான பராமரிப்பும், பாதுகாப்பும் துளிகூட இல்லை. மஞ்சள் குடோனின் மேற்கூரை கீற்றுக் கொட்டகையில் அமைக்கப்பட்டுள்ளது. மழைக் காலங்களில் குடோனில் மழைநீர் புகுந்து, இருப்பு வைக்கப்பட்டுள்ள மஞ்சள் நனைந்து வீணாகி வருவது வாடிக்கை.
மாநகராட்சியாக ஈரோடு தரம் உயர்த்தப்பட்ட பின் நகரைச் சுற்றியுள்ள கட்டிடங்களின் மதிப்பு ராக்கெட் வேகத்துக்கு உயர்ந்துள்ளது. இதனால், அரசு நிர்ணயித்துள்ள வாடகைக்கு கட்டிடம் கிடைக்காமல் அலுவலர்களுக்கும் தவிக்கின்றனர். சென்னிமலை ரோட்டில் உள்ள முத்தம்பாளையம் ஹவுசிங் யூனிட்டில் பத்து ஏக்கர் பரப்பளவில் காலியிடம் கிடைக்குமா? என்ற எதிர்பார்ப்பில் இடம் தேர்வு செய்யும் பணி நடக்கிறது. அவ்வாறு அந்த இடம் அமையவில்லை எனில், 40 ஆயிரம் சதுர அடியில் தனியார் கட்டிடமாவது வாடகைக்கு கிடைக்குமா? என்ற எண்ணத்தில் அதிகாரிகள் தேடி வருகின்றனர்.

**விலை சரிவதால் அவசர அவசரமாக மஞ்சள் அறுவடை ஒரே நாளில் குவிண்டாலுக்கு ரூ. 300 சரிவு**

கோபிசெட்டிபாளையம்: மஞ்சள் விலை கடந்த வாரம் ஒரே நாளில் 300 ரூபாய் குறைந்ததால், கோபி சுற்று வட்டாரத்தில் முற்றிய மஞ்சளை அறுவடை செய்யும் பணியில் விவசாயிகள் தொடர்ந்து வேகம் காட்டி வருகின்றனர். இந்திய அளவில் ஈரோடு மஞ்சளுக்கு நல்ல மவுசு உண்டு. வழக்கமாக மஞ்சள் அறுவடை நடக்கும்

தை மா வெளி மாநிலத்தில் இருந்து ஏராளமான மஞ்சள் வியாபாரிகள் ஈரோட்டில் குவிந்து விடுவர். சென்றாண்டு ஆந்திரா மற்றும் கர்நாடகாவில் ஏற்பட்ட புயல் மற்றும் மழை காரணமாக மஞ்சள் உற்பத்தி குறைந்தது. இதனால், வட மாநிலத்தை சேர்ந்த மஞ்சள் வியாபாரிகள் ஈரோட்டில் முகாமிட்டனர். அப்போது ஒரு குவிண்டால் மஞ்சள் விலை 13 ஆயிரத்து 700 ரூபாயை தொட்அங்கன்வாடி மையத்தை திறக்க வருவாரா மந்திரி ராசா? காத்திருக்கும் சித்தன்குட்டை ஏழைக்குழந்தைகள்

டி.என்.பாளையம்: பவானிசாகர் அருகே பல லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் திறக்கப்படாமல் அமைச்சருக்காக காத்திருக்க, ஏழைக்குழந்தைகள் அடிப்படை வசதியற்ற பாழடைந்த கட்டிடத்தில் தினந்தோறும் அவதியுறுகின்றனர். பவானிசாகர் யூனியன் பெரியகள்ளிப்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்டது சித்தன் குட்டை கிராமம். பெரும்பாலும் ஏழை விவசாயக் கூலித்தொழிலாளர்களும், மாவட்டத்தின் பிற பகுதிகளுக்கு கூலி வேலைக்கு செல்லும் தொழிலாளர்களுமே வசிக்கின்றனர். சித்தன்குட்டை, ஜெ.ஜெ.நகர் மற்றும் சுற்றுப்பகுதியிலுள்ள கிராமக் குழந்தைகள் இளவயது கல்வியைத் தொடரவும், சத்தான உணவு வகைகள் தந்து குழந்தைகளை முறையாக பராமரிக்கவும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ், சித்தன்குட்டையில் அங்கன்வாடி மையம் துவக்கப்பட்டது. தற்போது 40 குழந்தைகள் இங்கு கல்வி பயில்கின்றனர். அங்கன்வாடி மைய ஊழியர் ஒருவரும், ஆயா ஒருவரும் பணியில் உள்ளனர். சித்தன்குட்டை அங்கன்வாடி மையம் இயங்கும் வாடகை கட்டிடத்தை, "கட்டிடம்' என்று அழைக்க எந்தத் தகுதியும் இல்லை. எட்டுக்கு பத்து அடி அளவில் ஹாலோ பிரிக்ஸ் கற்களால் கட்டப்பட்டு, மேலே சிமென்ட் ஷீட் வேயப்பட்டுள்ளது. வேறெந்த அடிப்படை வசதிகளும் இல்லாத இக்கட்டிடத்தை சுற்றிலும், புல்லும், முட்செடிகளும் அடர்ந்து வளர்ந்துள்ளன. பல்வேறு வித பூச்சிகளும், விஷ ஜந்துக்களும் தாராளமாக உலா வரும் இடத்தில் அமைந்துள்ளது இம்மையம். கழிப்பிடம் ஏதும் இல்லாததால், குழந்தைகள் திறந்த வெளியை கழிப்பிடமாக பயன்படுத்துகின்றனர். இக்கட்டிடத்தில் சமையல் செய்வதற்கு எவ்வித வசதியும் இல்லாத நிலையில், பக்கத்தில் உள்ள இடத்தில் சமையல் செய்து குழந்தைகளுக்கு வழங்குகின்றனர். கட்டிடத்தில் எவ்வித ஜன்னல் வசதியும் இல்லை. மையம் இயக்கும் வேளையில் அதன் தகரக்கதவை திறந்து வைத்து விடுவர். அதன் வழியே வரும் காற்றும், சூரிய ஒளியும்தான் உள்ளே புகுகிறது. 40 குழந்தைகள் காலையில் அமர்ந்து பயிலவும், மதியம் படுத்துறங்கவும் இக்கட்டிடத்தில் போதிய இட வசதியில்லை. குழந்தைகளின் அவதியைப் போக்கும் வகையில் ஊரகவளர்ச்சித் துறை நடவடிக்கை மேற்கொண்டது. 2008-09 ஊரக உள் கட்டமைப்பு திட்டத்தின் கீழ் சித்தன்குட்டையில் 2.63 லட்சம் ரூபாய் செலவில் புதிதாக அங்கன்வாடி மையக் கட்டிடம் நவீன முறையில் கட்டப்பட்டது. சமையல் கூடம், கழிப்பிட வசதியுடன், குழந்தைகள் தாராளமாக அமர்ந்து படிக்கும் வகையில் கட்டிடம் அமைந்துள்ளது. மாவட்ட கவுன்சிலர் சுந்தரம் பரிந்துரையில் கட்டப்பட்ட இக்கட்டிடம் பணி முடிந்து ஆறு மாதங்களாகி விட்டன. இன்னும் திறப்பு விழா நடக்காததால் மையத்தை பூட்டியே வைத்துள்ளனர். இதுபற்றி விசாரித்ததில், மத்திய அமைச்சரும் உள்ளூர் எம்.பி.,யுமான ராசா வந்து திறக்க வேண்டும் என்பதற்காக புதிய மையம் காத்திருப்பது தெரியவந்தது. பக்கத்திலேயே அடிப்படை வசதியற்ற பாழ்பட்ட கட்டிடத்தில் குழந்தைகள் கடும் அவதியுற்றிருக்க, புதிய கட்டிடம் அமைச்சருக்காக காத்திருப்பது நியாயம்தானா? நாள்தோறும் புதிய கட்டிடத்தை ஏக்கத்தோடு பார்த்தவாறே குழந்தைகள் பழைய கட்டிடத்துக்கு நடைபோடுவது வேதனை. கோடை வெயில் கொளுத்த காத்திருக்கும் நிலையில், புதிய மையத்தை திறக்கச் செய்ய மாவட்ட கலெக்டர் ஏற்பாடு செய்ய வேண்டும்.
டது. "தங்கம் வாங்கி தாலி கட்டி விடலாம்; மஞ்சள் வாங்கி தாலி கட்ட முடியாது போலிருக்கே' என்ற புது பழமொழியே உருவானது.
மஞ்சளுக்கு கிடைத்த விலை உயர்வால் ஈரோடு விவசாயிகள் அதிகளவில் மஞ்சள் பயிரிட்டனர். ஆனால், மஞ்சள் கடும் சரிவை சந்திக்கிறது. அதிர்ச்சியடைந்த விவசாயிகள் முற்றிய மஞ்சளை அறுவடை செய்யாமல், விலை உயரும் என கருதி காத்திருந்தனர். ஆனால், புதிய மஞ்சள் வரத்து அதிகரித்ததால் விலை உயராமல், நாளுக்கு நாள் குறைந்தது.
நேற்று முன்தினம் நிலவரப்படி விரலி மஞ்சள் குவிண்டால் அதிகபட்சமாக 10 ஆயிரத்து 311 ரூபாய், குறைந்தபட்சமாக 9,899 ரூபாய், கிழங்கு மஞ்சள் அதிகபட்சமாக 10 ஆயிரத்து 21 ரூபாய், குறைந்தபட்சமாக 9,700 ரூபாய்க்கு விற்றது. கடந்த 5ம் தேதி விலையை விட விரலி மஞ்சள் 300 ரூபாய் வரை விலை குறைந்தது. புதிய

மஞ்சள் வரத்து அதிகரிப்பதால் மேலும் விலை குறையக் கூடும் என அஞ்சும் விவசாயிகள், முற்றிய மஞ்சளை அவசர அவசரமாக அறுவடை செய்கின்றனர். மஞ்சள் விலை குவிண்டால் ஒன்றுக்கு 13 ஆயிரம் ரூபாயை தொட்டபோது கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதியில் அதிகளவு மஞ்சள் பயிரிடப்பட்டது. பொங்கல் விழா முடிந்த பிறகு மேல்புறம் உள்ள மஞ்சள் இலைகளை விவசாயிகள் அறுக்கத் துவங்கினர். 20 நாட்கள் இடைவெளிக்கு பிறகு மண்ணில் உள்ள மஞ்சளை எடுக்க வேண்டும். ஆனால், விலை குறைவால் விவசாயிகள் மஞ்சளை மண்ணில் இருந்து எடுக்காமல் காலம் தாழ்த்தினர்.
தற்போது ஒரே நாளில் 300 ரூபாய் வரை விலை குறைந்ததால், மேலும் விலை குறையும் முன் மஞ்சளை மண்ணில் இருந்து தோண்டி எடுக்க ஆரம்பித்துள்ளனர். இதனால், கோபி மற்றும் சுற்று வட்டாரத்தில் மஞ்சள் அறுவடை களை கட்ட ஆரம்பித்துள்ளது.

**வில்லுக்குறி பகுதியில் நெற்பயிர் அறுவடை துவக்கம்**

வில்லுக்குறி: வில்லுக்குறி பகுதியில் நெல் அறுவடை துவங்கியது.குமரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்களுடைய விளைநிலங்களில் நெல் பயிரிட்டுள்ளனர். இவர்கள் ஆண்டுக்கு இருமுறை பயிரிடுகின்றனர். கன்னிப்பூ, கும்பப்பூ பருவங்கள் நெற்பயிருக்கு உகந்ததாகும். தற்போது கும்பப்பூ பயிரிடப்பட்டுள்ளது.
விவசாயிகள் பல இன்னல்களுக்கு மத்தியில் விவசாயம் செய்கின்றனர். இதில் பெரும்பாலான விவசாயிகள் உழைப்பிற்கேற்ற பலன் சரியான முறையில் கிடைப்பதில்லை என ஆதங்கப்படுகின்றனர். அதேவேளை வேளாண்மை துறை சார்பில் நடத்தப்படும் விளைச்சல் போட்டிகளில் பரிசு பெறும் அளவிற்கு மாவட்டத்தில் சிறந்த விவசாயிகளும் உள்ளனர்.தற்போது மாவட்டத்தில் நடவு செய்யப்பட்டுள்ள கும்பப்பூ நெற்கதிர் வந்ததும், வரக்கூடிய நிலையிலும் பல கட்டங்களாக உள்ளது. வில்லுக்குறி பகுதியில் உள்ள நெல்பயிர்கள் கதிர் வந்து அறுவடைக்கு தயாரான நிலையில் உள்ளது. விவசாயிகள் தங்களுடைய நெற்பயிரை பருவத்தில் அறுவடை செய்வதற்கு ஆட்கள் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.அறுவடைக்கு இயந்திரம் வந்துள்ளது விவசாயிகளுக்கு சற்று ஆறுதலாக உள்ளது. ஆனால் மாவட்டத்தில் எல்லா பகுதிகளிலும் அறுவடை இயந்திரம் கொண்டு சென்று அறுவடை செய்ய முடியாத நிலை உள்ளது. இதனால் அறுவடைக்கு ஆட்கள் தேடி அலைந்து வில்லுக்குறி பகுதியில் நெல் அறுவடையை விவசாயிகள் துவங்கியுள்ளனர்.கல்த்தான்குழி ஏலாவில் அறுவடை பணியில் ஈடுபட்டுள்ள ஒருவர் கூறியதாவது:நெற்பயிர் அறுவடை பணியானது தற்போது மிகவும் சிரமமான ஒன்றாகவே மாறியுள்ளது. நாங்கள் காலம் காலமாக இந்த பணியை மேற்கொண்டுள்ளோம். 5 சென்டில் நெற்பயிர் அறுவடை செய்ய 6 மரைக்கா நெல் கூலியாக பெறுகிறோம். இதை எத்தனை பேர் செய்தாலும் இதே கூலிதான் கிடைக்கிறது என கூறினார்.

**பாசன தண்ணீர் நிறுத்தப்பட்டதால் பாதி சாவியாகி விட மீதி கருகுகிறது : மேலூர் பகுதி விவசாயிகளின் சோகம்**

மேலூர் : பருவம் தப்பி பெய்த மழை, தாமதமாக திறக்கப்பட்டு அதையும் தற்போது நிறுத்தி விட்ட வைகை பாசன தண்ணீர் என தொடர் தாக்குதலால், நட்ட நெல்லை அறுவடை செய்ய முடியாமல் பாதி சாவியாகவும், எஞ்சியதை கருகவிட்டும் மேலூர் பகுதி விவசாயிகள் சோகத்தில் உள்ளனர். ஒரு போக சாகுபடி பகுதியான மேலூர், கொட்டாம்பட்டியில் 25 ஆயிரத்து 545 ஏக்கர் நஞ்சை நிலங்களும், 21 ஆயிரத்து 33 ஏக்கர் புஞ்சை நிலங்களும் உள்ளது. இவ்விரு பகுதியில் உள்ள 63 ஊராட்சிகளில் 40 ஊராட்சி பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பெரியாற்று கால்வாய் மூலம் நேரடியாக பாசன வசதி பெறுகின்றன. எஞ்சிய 23 ஊராட்சிகள் கண்மாய், கிணறு துணையுடன் விவசாயம் மேற் கொள்கிறது. ஆண்டு தோறும் ஆகஸ்ட்டில் மேலூர் பகுதிக்கு தண்ணீர் திறப்பது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் தான் தண்ணீர் மேலூர் வந்தது. தண்ணீர் தொடர்ந்து வருமா ? என சந்தேகத்தில் இருந்த விவசாயிகள் பணிகளை துவக்க சிறிது கால தாமதம் செய்தனர்.

அந்த நேரத்தில் தொடர் மழை பெய்யவே, தைரியமாக விவசாய பணிகள் துவக்கப்பட்டன. மற்ற மாவட்டங்களில்

பெய்த அளவு மேலூர் பகுதியில் இல்லை. இந்நிலையில் வைகை பாசன தண்ணீர் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது. இன்னும் இரண்டு தண்ணீர் இருந்தால் பயிரை காப்பாற்றிவிடலாம் என்னும் நிலை பல இடங்களில் உள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால் உறங்கான்பட்டி, ஐவத்தாம்பட்டி, பழையூர்பட்டி, கீழையூர், இ.மலம்பட்டி போன்ற கடைமடை பகுதிகளில் பயிர்கள் கருகிய நிலையில் உள்ளது. பல இடங்களில் சாவியாக நெல்லை அறுவடை செய்யும் நிலை தொடர்கிறது. வெள்ளலூர் விவசாயி ராஜா : ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து பயிர் செய்துள்ளோம். தண்ணீர் பற்றாக்குறையால் பல இடங்களில் நெற் கதிர்கள் கருகி கொண்டுள்ளது. இன்னும் இரண்டு தண்ணீர் கொடுத்தால் சில இடங்களில் பயிரை காப்பாற்றி விடலாம். ஆனாலும் பெரும்பகுதி பயிர்கள் கருகி வருகிறது என்பதே உண்மை. மதுரை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வரியை ரத்து செய்ய வேண்டும் என்றார். பழையூர்பட்டி விவசாயி கணேசன் : சாவியான பயிர்களை மாடுகளை விட்டு மேயவிடுகிறோம். கடன் வாங்கி செலவு செய்த பணம் அனைத்தும் போச்சு. கண்மாயை ஒட்டி உள்ளவர்களின் ஆயில் பம்பு உதவியுடன் தண்ணீரை எடுத்து சிலர் பயிரை காப்பாற்றி வருகின்றனர். அதற்கு செலவு செய்யும் பணத்தையாவது அவர்கள் திருப்பி எடுப்பார்களா? என்பதும் சந்தேகம் தான் என்றார். மதுரை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, விவசாய கடன் தள்ளுபடி, நில வரி ரத்து போன்றவை செய்யப்பட்டால் தான் இப்பகுதி விவசாயிகள் கடன் சுமையில் இருந்து ஓரளவு தப்ப முடியும்.

**மதுரை சக்கிமங்கலம் பகுதி விவசாயிகள் 'க(த)ண்ணீர்' 400 ஏக்கர் நெற்பயிர் கருகும் பரிதாபம்**

மதுரை : மதுரை சக்கிமங்கலத்தில், நெற்பயிர் பால் பிடித்து, கதிர் பிடிக்கும் தருவாயில், தண்ணீர் இல்லாததால், பல ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிர்கள் கருகிக் கொண்டுஇருக்கின்றன. இதை தவிர்க்க, அக்கிராம மக்கள் தங்கள் சொந்த செலவில், வைகையாற்றில் இருந்து பம்பு செட் மூலம், அரை கி.மீ., தூரத்திற்கு தண்ணீர் எடுத்து பயன்படுத்துகின்றனர்.விரகனூர் மதகு அணையின் இடது பிரதான கால்வாய் மூலம், சக்கிமங்கலத்தில் 400 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன.

இந்த நிலங்களில் பம்பு செட் மோட்டாரோ, கிணறுகளோ இதுவரை அமைக்கப்படவில்லை. மதகு அணையிலிருந்து விடப்படும் தண்ணீரைதான் விவசாயிகள் நம்பியுள்ளனர். இவர்களுக்கு கடைசியாக கடந்தாண்டு நவ.,18 முதல் 26 வரை தண்ணீர் விடப்பட்டது. இதை நம்பி, விவசாயிகள் பயிரிட்டனர். தற்போது பயிர் பால் பிடித்து, கதிர் பிடிக்கும் தருவாயில் உள்ளது. இந்நிலையில், வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவது நிறுத்தப் பட்டது. இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. சில நிலங்களில் நெற்பயிர்கள் கருகி வருகின்றன. இதைதவிர்க்க, அணையிலிருந்து அரை கி.மீ., தூரத்தில், வைகையாற்றில் உள்ள "மெகா' பள்ளத்தில் தேங்கியுள்ள கழிவுநீரை, அரை கி.மீ., தூரத்திற்கு "ஹோஸ் பைப்' அமைத்து, மூன்று பம்புசெட் மோட்டார் மூலம் எடுத்து, இடது பிரதான கால்வாயில் பாய்ச்சி, நிலங்களுக்கு எடுத்துச் செல்கின்றனர். ஏக்கர் ஒன்றுக்கு 100 ரூபாய் வீதம், இதற்கான மொத்த செலவு 70,000 ரூபாயை அனைத்து விவசாயிகளும் பகிர்ந்துள்ளனர். இரவு, பகலாக சுழற்சி முறையில் வீட்டிற்கு ஒருவர் வீதம் தண்ணீர் பாய்ச்சும் பணியை மேற்கொண்டுள்ளனர்.பெரியாறு பாசன விவசாய சங்க செயலாளர் பொன்னையா: ஒரு ஏக்கர் நடவு பணிக்கு குறைந்தது 10,000 ரூபாய் செலவாகிறது. கூலியாட்களுக்கு தினமும் 70 ரூபாய் சம்பளம் தருகிறோம். தற்போது மத்திய அரசின் நூறு நாள் வேலை திட்டத்தில், தினமும் 100 ரூபாய் சம்பளம் தருவதால் வேலையாட்களும் கிடைப்பதில்லை. இதனால் நில உரிமையாளர்களே வேலை செய்ய வேண்டியுள்ளது. நிலையூர் கால்வாய் மற்றும் வண்டியூர் கண்மாய் தண்ணீரை எங்களுக்கு வழங்கினால், ஓரிரு மாதங்களில் அறுவடை செய்துவிடுவோம். பொதுப்பணித்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.விவசாயி சேதுராமன் : தற்போது பம்புசெட் மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சினாலும், இன்னும் மேட்டு பகுதிகளில் தண்ணீர் வரவில்லை. இதனால் 70 ஏக்கர் பாசன நிலங்கள் கருக ஆரம்பித்துள்ளன. எங்களுக்கு வேறு தொழிலும் தெரியாது. நாங்களும் பலமுறை அதிகாரிகளிடம் கூறிவிட்டோம். ஆனால் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.விவசாயி செந்தில் : இடது பிரதான கால்வாயை நம்பிதான் நாங்கள் பயிர் செய்கிறோம்.

இதில் தண்ணீர் வரும் சமயத்தில் தான் வழக்கமாக பயிரிடுவோம். ஆனால், பருவம் தவறி பெய்த மழையை நம்பி பயிரிட்டோம். தற்போது தண்ணீர் இல்லாததால், ஆற்றில் இருந்து எடுத்து பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு உள்ளது. இதில் எங்களுக்குதான் நஷ்டம்தான் ஏற்படும். இருந்தாலும், நெற்பயிரை காக்க வேண்டும் என்பதற்காகவே இதை மேற்கொண்டுள்ளோம்.பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, ""வடகிழக்கு பருவமழை தாமதமாக பெய்ததே இந்நிலைக்கு காரணம். கருகும் நெற்பயிர்களை காக்க, எங்களால் ஆன உதவிகளையும் நேரடியாகவும், மறைமுகமாகவும் செய்து வருகிறோம்'' என்றனர். எப்படியோ உழுதவன் கணக்கு பார்த்தால் உழக்கு கூட மிஞ்சாது என்ற சோகம் இது தானோ.

**மல்லிகை விலை குறைகிறது**

மதுரை : மதுரையில் பனிப்பொழிவை சமாளித்து, மல்லிகை வரத்து அதிகரித்துள்ளதால், அதன் விலை கிலோவிற்கு 150 ரூபாய் குறைந்துள்ளது.பூ மார்க்கெட் சங்கத் தலைவர் ராமச்சந்திரன் கூறியதாவது :ஒரு கிலோ மல்லிகை கடந்த வாரம் 400 ரூபாய்க்கு விற்கப்பட்டது. நேற்று 250 ரூபாய் முதல் 300 ரூபாய் வரை குறைந்தது. வரும் நாட்களில் மேலும் விலை குறையும்.பிச்சிப்பூ கிலோ 300 ரூபாய், சம்பங்கி 60, ரோஸ் 50, அரளி 60, மரிக்கொழுந்து 40, வாடாமல்லி 30, கோழிக்கொண்டை 40, செவ்வந்தி 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது என்றார்.

**முள்ளங்கி விலை கிலோ 5 ரூபாய்**

மதுரை : கொடைக்கானல் பகுதியில் இருந்து, மதுரை சென்ட்ரல் மார்க்கெட்டிற்கு முள்ளங்கி வரத்து அதிகரித்துள்ளது. கடந்த வாரம் கிலோ 10 ரூபாய்க்கு விற்ற முள்ளங்கி, நேற்று 5 ரூபாய்க்கு விற்கப்பட்டது. மற்ற காய்கறி விலை குறித்து, மார்க்கெட் சங்கத் தலைவர் முருகன் கூறியதாவது :ஒரு கிலோ தக்காளி 9 ரூபாய், உருட்டு தக்காளி 8, கத்தரிக்காய் 20, வெள்ளை கத்தரிக்காய் 15, பூசணிக்காய் 5, புடலங்காய் 8, பீட்ரூட் 10, கேரட் 12, சுரைக்காய் 5, காலிபிளவர் 7-9, முட்டைகோஸ் 4, வெண்டைக்காய் 10, வெங்காயம் 12, சிறிய வெங்காயம் 14, பாகற்காய் 15, சிறிய பாகற்காய் 25, பச்சை மிளகாய் 12, ஆந்திர பச்சை மிளகாய் 9, நூக்கல் 8, முருங்கைக்காய் 40, உருளை கிழங்கு 12, சேனை கிழங்கு 18, கருணை கிழங்கு 16, பட்டாணி 25, இஞ்சி 35, பச்சை மொச்சை18, அவரைக்காய் 9-12, கொத்தவரை 6, கறிவேப்பிலை 14, கொத்தமல்லி 10, புதினா 6, கீரை வகைகள் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.சென்ட்ரல் மார்க்கெட் விலைக்கும், மற்ற இடங்களில் விற்கப்படும் காய்கறி விலைக்கும் சம்மந்தமில்லை.

**பனியால் பயறு விலை அதிகரிப்பு**

மதுரை: பனிக்காரணமாக மதுரைக்கு பயறு வரத்து குறைந்துள்ளதால், அதன் விலை மூடைக்கு 500 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. பருப்பு வியாபாரிகள் சங்கச் செயலாளர் வெற்றிச்செல்வன் கூறியதாவது :
கடந்த வாரம் 4100 ரூபாய்க்கு விற்ற துவரம் பயறு, நேற்று 4600 ரூபாய்க்கும், பருப்பு 6500 ரூபாயிலிருந்து 6200 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. உளுந்தம் பயறு 4500 ரூபாயிலிருந்து 4700 ரூபாய்க்கும், பருப்பு 6800 ரூபாயிலிருந்து 6500 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.பாசி பயறு 5100 ரூபாயிலிருந்து 5300 ரூபாய்க்கும், பருப்பு 7700 ரூபாயிலிருந்து 8000 ரூபாய்க்கும், கடலை பயறு 2300 ரூபாயிலிருந்து 2250 ரூபாய்க்கும், பருப்பு 2800 ரூபாயிலிருந்து 2750 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. பட்டாணி பயறு 1500 ரூபாய், பருப்பு 1700 ரூபாய் என்பதில் மாற்றமில்லை என்றார்.

**சீரான விலையில் பழ விற்பனை**

மதுரை:யானைக்கல் வியாபாரி செந்தில் கூறியதாவது :ஒரு கிலோ ஆப்பிள் 100-120 ரூபாய், வாஷிங்டன் ஆப்பிள் 120, சோனா திராட்சை 40 - 50, மஸ்கட் திராட்சை 70, பன்னீர் திராட்சை 30, அன்னாசி 25, மால்டா ஆரஞ்சு 50, நாக்பூர் ஆரஞ்சு 30, சாத்துக்குடி 30, சீன ஆப்பிள் 90, சீன பேரிக்காய் 70, சப்போட்டா 20, பப்பாளி 15, மோரீஸ் வாழைப்பழம் 20, கிர்னிப் பழம் 30, நெல்லிக்காய் 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்றார்.

**ஜெ.சி.எல். ரக அரிசி விலை குறைவு**

மதுரை : மதுரையில் டீலக்ஸ் பொன்னி போன்று காணப்படும் ஜெ.சி.எல். ரக அரிசி விலை கிலோவிற்கு 50 காசு குறைந்து, 24.50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.மற்ற அரிசி விலையில் மாற்றமில்லை. அரிசி ஆலை உரிமையாளர் சங்கச் செயலாளர் சந்திரன் கூறியதாவது : ஒரு கிலோ வெள்ளை பொன்னி புதுசு 26 ரூபாய், டீலக்ஸ் பொன்னி 25.50 ரூபாய், கல்சர் பொன்னி மற்றும் ஐ.ஆர்., 20 ரக அரிசி 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. டீலக்ஸ் பொன்னி பழசு கிலோ 33 ரூபாய், கல்சர் பொன்னி பழசு 22, வெள்ளை பொன்னி 33, கர்நாடகா டீலக்ஸ் பொன்னி 38, செல்லப்பொன்னி 23, அம்பை பதினாறு 21.50, பச்சரிசி நயம் 38, அடுத்த ரகம் 34, மாவு பச்சரிசி 20, பிரியாணி அரிசி 54, அடுத்த ரகம் 50, நடப்பு பிரியாணி அரிசி 45 ரூபாய்க்கு விற்கப்படுகிறது, என்றார்.

**விவசாயிகளுக்கு நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி தஞ்சை மாவட்டத்தில் இன்று தொடக்கம்: கலெக்டர்**

தஞ்சாவூர்: மாவட்ட அளவிலான விவசாயிகள் மற்றும் கிராமப்புற குழுக்களுக்கான நுகர்வோர் விழிப்புணர்வு பயிற்சி இன்று (10ம்தேதி) தொடங்கும் என்று கலெக்டர் சண்முகம் தெரிவித்து உள்ளார்.
அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:மத்திய அரசின் நிதியுதவியுடன் மாவட்ட அளவில் விவசாயிகள், விவசாயம் தொடர்பாக பணி புரியும் நுகர்வோருக்கு நுகர்வோர் உரிமைகள், கடமைகள் மற்றும் உணவு பாதுகாப்பு குறித்த பயிற்சி வழங்க அரசு உத்தரவிட்டு உள்ளது.இதன்படி தஞ்சை மாவட்டத்தில் வேளாண்துறை சார்பில் பயிற்சி அளிக்க கும்பகோணம் சாக்கோட்டை பகுதியைச் சேர்ந்த வேளாண் உதவி இயக்குனர் உதயகுமார். கும்பகோணம் வேளாண் உதவி இயக்குனர் அலுவலக வேளாண் அலுவலர் சுப்ரமணியன், தஞ்சை மாவட்ட ஊரக நுகர்வோர், மனித உரிமைகள் பாதுகாப்பு இயக்கத் தலைவர் சுந்தரவிமல்நாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சென்னையில் இதற்காக பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.இதன்படி தஞ்சை மாவட்டத்தில் 150 விவசாயிகள் வேளாண் துறை மூலம் தேர்வு செய்யப் பட்டு தலா 50 விவசாயிகள் வீதம் 3 கட்டமாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது.முதல்பயிற்சி இன்று (10ம்தேதி) தஞ்சை கலெக்டர் அலுவலகத்திலும், இரண்டாம் கட்டமாக வரும் 18ம் தேதி கும்பகோணம் தாலுகாவிற்கு திருப்பனந்தாள் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், மூன்றாம் கட்டமாக வரும் 25ம்தேதி பட்டுக்கோட்டை தாலுகாவிற்கு சேதுபாவாசத்திரம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும் நடக்கிறது.இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கம்பம் நிலக்கடலை விவசாயிகள் கவனத்திற்கு**

கம்பம்: நிலக்கடலை விவசாயிகளுக்கு, ஒரு எக்டேருக்கு 400 கிலோ ஜிப்சம், 50 சதவீத மானிய விலையில் விற்கப்படுவதாக கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குநர் (பொறுப்பு) ராமராஜ் தெரிவித்துள்ளார்.அவரது அறிக்கை: இறவை மற்றும் மானாவாரியில் நிலக்கடலை கம்பம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்படுகிறது. நிலக்கடலையின் கூடுதல் மகசூலுக்கு ஜிப்சம் அவசியம் இட வேண்டும். ஜிப்சம் ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ விவசாயத்துறை மூலம் விற்பனை செய்கிறோம். 50 சதவீத மானியத்தில் ஜிப்சம் விற்பனை செய்யப்படுகிறது. எட்டு மூடைகளுக்கு 750 ரூபாய் மானியமாக கிடைக்கும்.பாசிப்பயறுக்கு கிலோவிற்கு 20 ரூபாய் மானியமாக வழங்குகிறோம். ஒரு ஹெக்டேருக்கு 20 கிலோ பாசிப்பயறு பெற்றுக் கொள்ளலாம். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நெல்லுக்கு ஜிங் சல்பேட் ஒரு ஹெக்டேருக்கு 25 கிலோ விற்பனை செய்கிறோம். ஒரு கிலோ முழு விலை ரூ. 33.80 பைசா. அதில் 50 சதவீத மானியம் போக கிலோ ரூ. 16.90 பைசாவிற்கு விற்பனை செய்யப்படுகிறது. தேவையான அளவு இருப்பு கம்பம் விவசாயத்துறை அலுவலகத்தில் உள்ளது," என தெரிவித்துள்ளார்.

**கால்நடை விழிப்புணர்வு மருத்துவ முகாம்**

கோவில்பட்டி : குருவிகுளம் அரசு மேல்நிலைப்பள்ளி என்.எஸ்.எஸ்.சார்பில் கால்நடை விழிப்புணர்வு மருத்துவ முகாம் நடந்தது.அரசு கால்நடை ஆஸ்பத்திரியில் நடத்தப்பட்ட முகாமில் கால்நடைகளுக்கு வரும் நோய்கள், தடுப்புமுறைகள் மற்றும் செயற்கைமுறை கருவூட்டல் போன்றவை குறித்து மாணவர்களுக்கு டாக்டர் சித்ராதேவி விளக்கினார். மேலும் செயற்கைமுறை கருவூட்டல் பற்றிய செயல் விளக்க பயிற்சியும் அளித்தார். விவசாயத்திற்கு பயன்படும் கால்நடைகள் பற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் முகாம் நடத்தப்பட்டது. ஏற்பாடுகளை என்.எஸ்.எஸ்.திட்ட அலுவலர் சுப்பாராஜூசெய்திருந்தார்.

**மீன்கள் அதிகம் கிடைக்க வாய்ப்புள்ள பகுதிகள்**

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்ட கடலோர பகுதிகளில் அதிகமாக மீன் கிடைக்க வாய்ப்புள்ள பகுதிகளை ஹைதராபாத்தில் உள்ள தேசிய கடல் தகவல் சேவை மையம் செயற்கைக்கோள் மூலம் ஆராய்ந்து வெளியிட்டுள்ளது.இதுகுறித்து மீன்வளக்கல்லூரி ஆராய்ச்சி நிலைய முதல்வர் (பொறுப்பு) வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,மணப்பாட்டிற்கு தென்மேற்குத் திசையில் 230 டிகிரியில் 90-95 கி.மீ. தூரத்தில் 50-55 மீ. ஆழத்தில் அதிக அளவில் மீன் கிடைக்கும். இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உளுந்து, பாசிப்பயிறு விலை சரிவு**

புதியம்புத்தூர் : புதியம்புத்தூர் பயறு வகை விளைச்சல் அறுவடை நடை பெறுவதால் உளுந்து, பாசிப்பயறு விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.புதியம்புத்தூர் வட்டார பகுதியில் உளுந்து, பாசிப்பயறு, தட்டப்பயிறு, மக்காச்சோளம் போன்ற விவசாய பயிர்கள் எதிர்பார்த்த விளைச்சல் இல்லையென்றாலும் கூட, ஒரு சில விவசாயிகளுக்கு மீடியமான விளைச்சல் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பயறுவகைகளை தான்ய மண்டியில் விற்பனைக்கு கொண்டு செல்கின்றனர். ஆனால் விலையோ எதிர்பார்த்தபடி இல்லை. உளுந்து சில்லறை விற்பனை கடையில் கிலோ 65க்கு விற்பனை செய்யப்படுகிறது. உருட்டு உளுந்து 80க்கு விற்பனையாகிறது. பாசிப்பயறு கிலோ 60க்கு விற்கப்படுகிறது. அதுபோல் தட்டப்பயறு கிலோ 50 சில்லரைக்கு விற்கப்படுகிறது. ஆனால் விவசாயிகளின் உளுந்து தான்ய மண்டியில் குவிண்டால் ரூ.4000க்குத்தான் வாங்கப்படுகிறது. தட்டப்பயறு குவிண் 4500க்கு எடுக்கப்படுகிறது. அதாவது உளுந்து கிலோ 40க்கும், பாசிப்பயறு கிலோ 45க்கும் விலை போகிறது. ஒன்று விவசாயிகளுக்கு கூடுதல் விலை கொடுக்க வேண்டும். இல்லையெனில் சில்லரை விற்பனை ரேட்டையாவது வியாபாரிகள் குறைக்க வேண்டும். அரசு இதில் தலையிட்டு விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கச் செய்ய வேண்டும்.

**நிலக்கடலை மகசூல் அதிகரிக்க யோசனை விவசாயிகள் பயன்பெற அதிகாரி அழைப்பு**

தா.பேட்டை: தா.பேட்டை வேளாண்மை உதவி இயக்குனர் சவுந்தரம் விடுத்துள்ள செய்திகுறிப்பில் கூறியிருப்பதாவது:தற்போது நிலக்கடலை பயிரில் விழுது இறங்கி பருப்பு திரட்சியாக உருவாவது இல்லை. பொக்கில்லாமல் நிலக்கடலையில் பருப்பின் அளவு அதிகரிக்கவும், எடையை கூட்டவும் ஊட்டச்சத்து அளிக்க வேண்டியுள்ளது.

ஒரு ஹெக்டேர் நிலக்கடலை பயிருக்கு ஊட்டச்சத்து தெளிக்க 2.50 கிலோ டி.ஏ.பி., எனப்படும். டை-அமோனியம் பாஸ்பேட், ஒரு கிலோ அமோனியம் சல்பேட் மற்றும் 0.50 கிலோ போராக்ஸ் தேவையாகும். இந்த மூன்று வகையான உரங்களை 37 லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கி ஒருநாள் இரவு முழுவதும் ஊற வைக்கவேண்டும். தொடர்ந்து 12 மணி நேரம் ஊறிய கலவையை வடிகட்டி ஊட்டச்சத்து கலவையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

37 லிட்டர் கலவையை வடிகட்டிய பின் 32 லிட்டர் ஊட்டச்சத்து கிடைக்கும். 32 லிட்டர் ஊட்டச்சத்தினை 468 லிட்டர் தண்ணீரில் கலக்கி 500 லிட்டர் கலவையாக உருவாக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலக்கடலை பயிருக்கு

தெளிக்கலாம். இதே கலவையில் 375 மில்லி பிளோனோபிக்ஸ் பயிர் ஊக்கியை கலந்து நிலக்கடலை விதைத்த 25ம் நாளில் தெளிக்க வேண்டும்.

இதேபோல கலவையை மறுமுறையும் தயார் செய்து பத்து நாள் கழித்து மீண்டும் ஒருமுறை தெளிக்க வேண்டும். இவ்வாறு நிலக்கடலை பயிருக்கு கூட்டு ஊட்டச்சத்து அளிப்பதால் பருப்பு நன்கு உருவாகி விலைச்சல் கூடுதலாக இருக்கும்.

தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் இரண்டு முறை கூட்டு ஊட்டச்சத்து தெளிக்க ஒரு ஹெக்டேருக்கு ஐந்து கிலோ டி.ஏ.பி., இரண்டு கிலோ அம்மோனியம் சல்பேட் மற்றும் ஒரு கிலோ போராக்ஸ் ஆகிய உரங்கள் 50 சதவிகித மான்யத்தில் தா.பேட்டை வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கிறது. நிலக்கடலை விதைத்த விவசாயிகள் தங்கள் குடும்ப அட்டை மற்றும் பட்டா அல்லது சிட்டா நகலுடன் தா.பேட்டை வட்டார விரிவாக்க அலுவலர்களை அணுகலாம்.

மேலும், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ஜிப்சம் ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ என்ற அளவில் 50 சதவிகித மான்யத்தில் விநியோகம் செய்யப்படுகிறது. நிலக்கடலை விதைத்த 45ம் நாள் இரண்டாம் களையெடுப்பின் போது ஜிப்சத்தை செடியின் அருகில் இட்டு மண் அனைத்து பயிருக்கு தேவையான ஊட்டச்சத்தை கொடுத்து மகசூலை அதிகரிக்கலாம். ஜிப்சம் தேவைப்படும் விவசாயிகள் தா.பேட்டை வேளாண் உதவி இயக்குனரை நேரில் சந்தித்து பயன்பெறலாம்.

**அறுவடை நேரத்தில் அரிசி விலை உயர்வு : அரசின் தவறான கொள்கையே காரணம் : திருவாரூரில் தா.பாண்டியன் குற்றச்சாட்டு**

திருவாரூர்: ""அரசின் தவறான கொள்கையால் அறுவடை நேரத்தில் அரிசி விலை உயர்ந்து வருகிறது,'' என, தா.பாண்டியன் குற்றம்சாட்டினார். மன்னார்குடி எம்.எல்.ஏ., சிவபுண்ணியம் இல்ல திருமணத்துக்கு வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் தா.பாண்டியன் திருவாரூரில் நிருபர்களிடம் கூறியதாவது:
தமிழக அரசின் தவறான நெல் கொள்முதல் கொள்கை காரணமாக காவிரி பாசன பகுதியில் பெருமளவு அறுவடை முடிந்தும் குறைந்தளவே அரசு நெல் கொள்முதல் செய்துள்ளது. இதற்கு காரணம் விளைச்சல் குறைவு மற்றும் தனியார் கொள்முதல் அதிகமாவதுமாகும். அறுவடை நேரத்தில் கூட அரிசி விலை உயர்ந்து கொண்டே இருக்கிறது. இதற்கு மத்திய, மாநில அரசுகளின் கொள்கை, நடைமுறைகள் தான் காரணம். தமிழகத்தின் சில லட்சம் போலி ரேஷன்கார்டு கண்டுபிடித்துள்ளதாக உணவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். இத்தனை ரேஷன் கார்டுக்கும் அரிசி உட்பட அத்யாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. இந்த அட்டை யாரால், யாருக்கு வழங்கப்பட்டது என்பதை விசாரிக்க வேண்டும். தமிழகத்தில் கொலை, கொள்ளை அதிகரித்து வருகிறது. ஆளும் கட்சியினர் சில இடங்களில் தரிசு நிலங்கள் மற்றும் தனி நபர் நிலங்களின் ஆவணங்களை மாற்றி அபகரிக்கின்றனர். போலீஸாரும் இதை விசாரிப்பதில்லை. இதனால், தமிழகம் முழுவதும் பீதி நிலவியுள்ளது. அதேபோல, எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்களை, உள்ளாட்சி பிரதிநிதிகளையும் தங்கள் கட்சிக்கு ஆளும் கட்சியினர் இழுக்கும் வேலையை செய்கின்றனர். அந்த அமைப்புகளை கலைக்கும் முயற்சியை செய்கின்றனர். உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய அதிகாரம், பாதுகாப்பு வழங்கக் கோரி சட்டசபை கூட்டத்தொடர் நடக்கும்போது, உள்ளாட்சியைச் சேர்ந்தவர்கள் உண்ணாவிரதம் இருக்க திட்டம் தீட்டியுள்ளனர். பி.டி., கத்தரிக்காயை அரசு முழுமையாக தடை விதித்துள்ளதாக ஆணை வெளியிட வேண்டும். காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பு வெளியிடப்பட்டு மூன்றாண்டு முடிந்த நிலையிலும் தீர்ப்பை அமல்படுத்தவில்லை. நடுவர் மன்றம் அமைத்த மத்திய அரசு, "தீர்ப்பை அமல்படுத்த வேண்டும் என்ற பொறுப்பும், கடமையும் தனக்கும் உள்ளது' என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். இவ்வாறு தா.பாண்டியன் கூறினார். மாவட்ட செயலாளர் வீரசேனன், மாநில துணை செயலாளர் மகேந்திரன், மாவட்ட துணை செயலாளர் செல்வராசு, விவசாய சங்க மாவட்ட செயலாளர் மாசிலாமணி ஆகியோர் உடனிருந்தனர்.

**தண்டலம் கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி**

அரக்கோணம்: தண்டலம் கிராமத்தில் வேளாண்மை துறை சார் பில், தரமான எண்ணெய் வித்து பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. காவேரிப்பாக்கம் ஒன்றியத்துக்கு உட்பட்ட தண்டலம் கிராமத்தில் தமிழ்நாடு வேளாண்மை துறை சார் பில், விதை கிராம திட்டத் தின் கீழ், எண்ணெய் வித்து பயிர் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சிக்கு தண்டலம் பஞ்., தலைவர் பிரகாஷ் தலைமை வகித்து, துவக்கி வைத்தார். துணை தலைவர் தீனதயாளன் முன்னிலை வகித்தார். இச்சிப்புத்தூர் வேளாண்மை உதவி அலுவலர் திருக்குமார் வரவேற்றார். வேளாண்மை அலுவலர் பாபு, வேளாண்மை தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். காவேரிப்பாக்கம் வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன், தரமான எண்ணெய் வித்து பயிர் சாகுபடிக்கான தொழில்நுட்பங் கள், விதை நேர்த்தி, பயிர் பாதுகாப்பு, விதை சேமிப்பு மற்றும் அரசு வழங்கும் மானிய திட்டங்கள் குறித்து பேசினார். வேளாண்மை அலுவலர் பாபு, உதவி அலுவலர் திருக்குமார் ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர். இந்நிகழ்ச்சியில் தண்டலம் ஏரிப்பாசன சங்க தலைவர் பிரபாகரன் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். வேளாண்மை உதவி அலுவலர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

போளிப்பாக்கம்: போளிப்பாக்கத்தில் சிறுதானியங்கள் விதை உற்பத்தி பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் பாணாவரம் வேளாண்மை உதவி அலுவலர் செல்வகுமார், ஏரிப்பாசன தலைவர் மணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தோட்டபயிர் சாகுபடிக்கு விவசாயிகள் தயக்கம் மானியத்தில் விதை, மருந்துகள் வழங்காததால்**

ஸ்ரீவில்லிபுத்தூர்: மானியமாக விதை, மருந்துகள் வழங்கப்படாததால் தோட்டக்கலைத்துறையில் துல்லிய பண்ணை திட்டத்தில் சாகுபடி செய்ய விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத்துறையில் துல்லிய பண்ணை திட்டத்தில் சாகுபடி செய்ய கடந்தாண்டு வரை விவசாயிகளுக்கு அதிகபட்சமாக ஒரு எக்டேர் நிலப்பரப்பில் காய்கறி பயிர்கள், வாழை சாகுபடி செய்ய சொட்டு நீர்பாசனம் அமைக்க 50 சத மானியமும் 25 ஆயிரம் மதிப்புள்ள விதைகள், மருந்துகள், உரங்களும் மானியமாக வழங்கப்பட்டு வந்தது. இதில் சொட்டு நீர் பாசனம் அமைக்க வங்கிகள் கடன் வழங்க தாமதம் ஏற்பட்டதால் கடந்தாண்டு (2008-09) இத்திட்டத்தால் ஏழை விவசாயிகள் பலனடைய முடியாமல் போனது. இதனால் தோட்டக்கலைத்துறை ஊழியர்கள் வசதியான விவசாயிகளை தேடி சென்று நிறைவேற்றினர். தற்போது இந்தாண்டு (2009-10) துல்லிய பண்ணை திட்டத்தில் விவசாயிகளுக்கு அரசு சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சத மானியத்தை வழங்கியது. ஆனால் மானியமாக வழங்கப் பட்ட மருந்து, விதைகள் வழங்குவதை நிறுத்தி விட்டது. தற்போது 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள உரத்தை மட்டுமே மானியமாக வழங்க உத்தரவிட்டது.ஏற்கனவே கடந்தாண்டு மாவட்டத்தில் சரி வர மழை பெய்யாததால் கண்மாய்கள், கிணறுகளில் தண்ணீர் இல்லாத நிலை உள்ளது. இதனால் இந்தாண்டு சாகுபடி செய்ய விவசாயிகள் யோசித்து வரும் நிலையில் துல்லிய பண்ணை திட்டத்தில் விதைகள், மருந்துகள் வழங்குவதை நிறுத்தியதால் விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்வதில் தயக்கம் காட்டி வருகின்றனர்.

**முருங்கை பவுடர் தொழிற்சாலை அமையுமா? 30 ஆண்டுகளாக விவசாயிகள் எதிர்பார்ப்பு**

தாராபுரம் : "முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படும்' என்ற அரசியல்வாதிகளின் வாக்குறுதி, வெறும் வாய் வார்த்தையாக உள்ளதால், தாராபுரம் பகுதி முருங்கை விவசாயிகள் வருத்தத்தில் உள்ளனர்.
கடந்த சில ஆண்டுகளாக, தமிழகத்தில் பருவமழை பொய்த்து வருவதால், ஆற்று, வாய்க்கால் பாசனங்களில் இருந்து கிணற்றுப் பாசனத்துக்கு மாறியுள்ளனர், தாராபுரம் விவசாயிகள். ஆரம்பத்தில் 20 அடியில் கிடைத்த தண்ணீர், தற்போது ஆயிரம் அடி வரை துளையிட்டாலும் கிடைப்பதில்லை. இதனால், பல்வேறு தானிய வகைகளை பயிரிட்டு வந்த விவசாயிகள், குறைந்த நீரில் நீண்ட நாட்கள் பலன் தரும் முருங்கை சாகுபடியில்

ஆர்வம் காட்டினர். தாராபுரம், மூலனூர், மதுக்கம்பாளையம், வெள்ளகோவில், அலங்கியம், தளவாய்பட்டணம் உட்பட ஆயிரக்கணக்கான கிராமங்களில், பல ஆயிரம் ஏக்கர் முருங்கை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
வீட்டு விஷேசங்களில் முருங்கை இன்றியமையாததாக உள்ளதால், முருங்கை பயிரிட்டிருந்த விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. முருங்கை இலை, காய் மருத்துவ குணமுள்ளது என்பதால், வெளிநாட்டினர் விரும்பி வாங்கும் காய்கறி வகையில் முருங்கை தனி இடம் பிடித்துள்ளது.
முருங்கைக்கு ஆண்டு முழுவதும் சீசன் இருப்பதில்லை; தட்டுப்பாடு ஏற்படும்போதே முருங்கைக்கு நல்ல விலை கிடைக்கிறது. தற்போது, முருங்கைக்கு நல்ல விலை கிடைக்கிறது; ஆனால், காய் இல்லை. சீசன் சமயத்தில், கிலோவுக்கு ஒரு ரூபாய் கூட கிடைக்காமல், முருங்கைக்காயை மரத்திலேயே விட்டுவிடுவர். சில விவசாயிகள், முற்றிய காய்களை பறித்து, எரிபொருளாக பயன்படுத்தும் அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.
இப்பிரச்னையை தீர்க்க, தாராபுரம் அல்லது மூலனூரில் முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைத்து, முருங்கைக்காய் மற்றும் இலையை அரசே கொள்முதல் செய்து, மருந்துப்பொருளாகவும், உணவுப்பொருளாகவும் மாற்றி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். இதன் மூலம், முருங்கைக்கு ஆண்டு முழுவதும் நல்ல விலை கிடைக்கும் என்பது விவசாயிகளின் நீண்டநாள் எதிர்பார்ப்பு.
தாராபுரம், வெள்ளகோவில், காங்கயம், ஒட்டன்சத்திரம், திண்டுக்கல், பழனி சட்டசபை தொகுதிகளில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும், தாங்கள் வெற்றி பெற்றால், விவசாயிகளின் நலன் கருதி இப்பகுதியில் முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்கப்படும் என, வாக்குறுதிகளை அள்ளித் தெளிக்கின்றனர்; இதை நம்பி விவசாயிகளும் ஓட்டு போடுகின்றனர். ஆனால், ஒவ்வொரு தேர்தலிலும் இதே வாக்குறுதிதான் அரசியல்வாதிகளின் பிரசாரத்தில் நீங்கா இடம் பிடிக்கிறது; வாக்குறுதி கொடுப்பதோடு, அந்த வாக்குறுதியை மறந்து விடுகின்றனர், அரசியல்வாதிகள்.தேர்தலில் வெற்றி பெறும் எம்.எல்.ஏ., அல்லது எம்.பி.,க்கள், தங்களது பகுதியில் முருங்கை தொழிற்சாலை அமைய நடவடிக்கை எடுப்பர் என எதிர்பார்த்திருக்கும் விவசாயிகளுக்கு, ஏமாற்றமே மிஞ்சு கிறது. ஒன்றிரண்டு ஆண்டல்ல, கடந்த 30 ஆண்டுகளாக இதே நிலை நீடித்து வருகிறது என்பது மிகவும் வேதனை அளிப்பதாக உள்ளது. இந்நிலையில், தாராபுரம் பகுதியில் முருங்கை பவுடர் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென, தமிழக
அரசுக்கு கோரிக்கை மனு அனுப்பியுள்ளனர் முருங்கை விவசாயிகள்.

**நிலக்கடலை வரத்து குறைவு**

அவிநாசி : சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நடந்த நிலக்கடலை ஏலத் துக்கு 120 மூட்டை வரத் தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட் டிலும் 380 மூட்டை குறைவு.இந்த வார ஏலத்தில் அனைத்து ரக நிலக் கடலை விலை விபரம் (குவிண்டாலுக்கு) வரு மாறு: நிலக்கடலை (காய்ந் தது) முதல் ரகம் ரூ.2,850 முதல் ரூ.3,000 வரை, இரண்டாம் ரகம் ரூ.2,700 முதல் ரூ.2,780 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,550 முதல் ரூ.2,600 வரை. ஒழுங்குமுறை விற் பனைக்கூட கண்காணிப் பாளர் (பொறுப்பு) நடராஜன் கூறுகையில், ""கடந்த வாரத்தை விட 380 மூட்டை வரத்து குறைந்தது. நிலக்கடலை சீசன் முடிந்து விட்டது. ஏலத்துக்கு வந்த நிலக் கடலை தரம் குறைவாக இருந்ததால், விலையிலும் இறக்கம் காணப்பட்டது. இன்னும் ஒன்றரை மாதத்துக்கு பின், வரத்து அதிகரிக்கும்,'' என்றார்.

**தர்பூசணி விற்பனை 'டல்'**

திருப்பூர் : பனிக்காலம் இன்னும் முடியாததால், திருப்பூரில் தர்பூசணி பழங்களின் விற்பனை குறைவாகவே உள்ளது.திருப்பூரில் கடந்த சில வாரங்களாகவே வெயில் கொளுத்த ஆரம்பித்து விட்டது. வெயிலுக்கு ஏற்ற பதார்த்தங்களின் விற்பனையும் சூடுபிடித்துள்ளது. வெயில் காலத்தில் மக்கள் அதிகம் விரும்பும் தர்பூசணி பழங்களின் விற்பனையும் துவங்கி உள்ளது.தர்பூசணி வியாபாரி முல்லைராஜா கூறியதாவது:
லோக்கல் பழங்கள், பல்லடம் மற்றும் தாராபுரம், சூலூர் பகுதிகளில் இருந்து வருகின்றன. பெங் களூருவில் இருந்தும் கொண்டு வரப்படுகின்றன. லோக்கல் பழத்தை எட்டு நாட்களில் விற்றுவிட வேண்டும். பெங்களூரு

பழங்கள் 20 நாட்களுக்கு மேல் தாங்குகின்றன.ஒரு "பிளேட்' தர்பூசணி ஐந்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. கிலோ 15 ரூபாய் வரை விற்பனை யாகிறது. பனிக்காலம் இன்னும் தொடர்வதால், தர்பூசணி பழம் சாப்பிட மக்கள் ஆர்வம் காட்டுவதில்லை. சளித்தொல்லை ஏற்படும் என்று அச்சப்படுகின்றனர்.
விற்பனை குறைவாக இருப்பதால், பழங்கள் அழுகி நஷ்டம் ஏற்படுகிறது. மாசி மாதத்தில் விற்பனை சூடுபிடிக்கும், என்றார்.தக்காளி விலை சரிவு: தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளதால், விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள் ளது. திருப்பூர் காய்கறி மார்க்கெட்டுக்கு நேற்று மூன்று டன்களுக்கு மேலாக தக்காளி வந்தது. ஐந்து கிலோ எடை கொண்ட ஒரு கூடை, 35 ரூபாய் வரையே விற்பனையாகிறது. நல்ல விளைச்சல் இருந்தும் விலை இல்லாததால், விவசாயிகள் சோர்வடைந்துள்ளனர்.காய்கறி விலை விபரம் குறித்து திருப்பூர் வடக்கு உழவர் சந்தை நிர்வாக அலுவலர் ராமலிங்கம் கூறியதாவது:கத்தரி கிலோ 26 ரூபாய்; தக்காளி 7; வெண்டை 8; புடலை 12; பாகல் 15; பீர்க்கன்காய் 20; சுரைக்காய் 5 முதல் 8 வரை; சாம்பல் பூசணி 6; கொத்தவரை 13; உருண்டை மிளகாய் 20, சம்பா 16; அவரை 18; அரசாணி 6; முள்ளங்கி 9; பெரிய வெங்காயம் 22, சிறியது 12 முதல் 16 வரை. உருளை 18; கேரட் 22; பீன்ஸ் 20; பீட்ரூட் 16; பொரியல் தட்டை 14; கோஸ் 10; காலிபிளவர் 12; இஞ்சி 40; பூண்டு 90 ரூபாய் என விற்பனையானது. தேங்காய் கிலோ 10 ரூபாய்; சுக்கிட்டி கீரை கட்டு 1.50; புதினா கிலோ18; மற்ற கீரைகள் கிலோ 10; கறிவேப்பிலை கிலோ 25  ரூபாய்க்கு விற்கப்பட்டது, என்றார்.

### சின்னச்சின்ன செய்திகள் பிப்ரவரி 09,2010,16:02   IST

**மின் விரிவாக்க மையம்:** தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தில் விரிவாக்க இயக்கத்தின்கீழ் மின் விரிவாக்க மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் - வேளாண்மை தொழில்நுட்ப இணையதளம் (www.agritech.tnau.ac.in)  வேளாண்மை சார்ந்த அனைத்து தொழில்நுட்ப விபரங்களும் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வேளாண் விரிவாக்க பணியாளர்களுக்கு இணையதளத்தின் வழியாக வழங்கி வருவதுடன் தமிழ்நாடு விவசாய பல்கலைக் கழகத்தின் 60 மையங்களும் வீடியோ கான்பரன்சிங் தொழில்நுட்பத்தின் உதவியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

தினசரி சந்தைத் தகவல்: தமிழகத்திலுள்ள 13 சந்தைகளில் நிலவும் காய்கறிகள், பழங்கள், பூக்கள் மற்றும் மலைத்தோட்டப் பயிர்களின் தினசரி மொத்த மற்றும் சில்லரை சந்தை நிலவரங்கள் www.agritech.tnau.ac.in இணையதளம் வழியாக வழங்கப்படுகிறது. பதிவு செய்துகொண்டுள்ள விவசாயிகளுக்கு மொபைல்போன் வழியிலும் விவரங்கள் வழங்கப்படுகிறது.

* வேளாண்மை: அலைபேசி வழியாக தமிழகத்திலுள்ள விவசாயிகள் நிலம் மற்றும் பயிர் குறித்த சந்தேகங்களை நேரடியாக வேளாண் வல்லுநர்களுடன் கலந்து ஆலோசித்து தீர்வு பெறுவதற்கான இத்திட்டம் தனியார் நிறுவனத்தின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒற்றை நாற்று நடவு: தமிழ்நாட்டில் செம்மை நெல் சாகுபடி தற்போது நெல் உற்பத்தியில் பெரும் வரவேற்பு பெற்று வருகிறது. ஒற்றை நாற்று நடவு, நீர் மற்றும் களை மேலாண்மை முறைகளை செம்மையாக செய்வதன் மூலம் நெல் மகசூலைப் பெருக்க முடியும் என்பது நிதர்சனம். 1960களில் மடகாஸ்கர் தீவில் சில விவசாயிகளால் கடைபிடிக்கப்பட்டு வந்த ஒற்றை நாற்று நடவு முறை பல்வேறு பரிசோதனை முயற்சிகளுக்குப் பின் "செம்மை நெல் சாகுபடி' என்ற பெயரில் லாலேனியால் பிரபலப்படுத்தப்பட்டது. தொடர்ச்சியாக கார்னல் பல்கலைக்கழக பேராசிரியர் நார்மன் உபாப்-ன் பெருமுயற்சியால் உலகின் 40க்கும் மேற்பட்ட நாடுகளில் இம்முறை அறிமுகப்படுத்தப்பட்டு நெல் உற்பத்தியில் கடந்த சில ஆண்டுகளாக பெரும் புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

உளுந்து மகசூல் அதிகரிக்க கடல்பாசி உரத்திரவம்: இயற்கையில் கிடைக்கக்கூடிய கடல்பாசியில் பயிர் வளர்ச்சியைத் தூண்டக்கூடிய வளர்ச்சி ஊக்கிகள், ஆக்சின், ஜிப்ரலின், விட்டமின்கள், அமினோ அமிலங்கள்

மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் அடங்கியுள்ளன. கடற்பாசிகளால் உல்வா லாக்டுக்கா, டர்பினேரியா, கோனாய்ட்ஸ், சர்காசம் பாலிசிஸ்டம் ஆகியவை மத்திய கடல் மற்றும் மீன்வள ஆராய்ச்சி நிலையம், மண்டபம் கடற்கரை பகுதிகளில் சேகரிக்கப்பட்டு ஆய்விற்கு பயன்படுத்தப்பட்டன. கடற்பாசிகளை நன்றாக கழுவி, உலர்த்தி, பொடி செய்து கொதிக்கவைத்து ஆல்கஹாலில் கரைத்து கடற்பாசி உரம் தயாரிக்கப்பட்டு 0.75 சதம் விதைநேர்த்தி செய்தும், 2.50 சதம் இலைவழி நுண்ணூட்டமாகவும் இளம்பருவம் மற்றும் பூக்கும் பருவத்தில் தெளிக்கப் பட்டது. எல்லா கடல் பாசிகளும் உளுந்தில் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரித்தது. கடல் பாசிகளுள் சர்காசம், பாலிசிஸ்டம் என்ற பிரவுன் வகையானது ஆய்விற்கு உட்படுத்தப்படாத செடியை விட 19.1 சதவீதம் மகசூலை அதிகரித்துள்ளது. (தகவல்: க.சுஜாதா, கி.ராமமூர்த்தி, விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் பிரிவு, த.வே.பல்கலைக்கழகம், விவசாயக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104)

- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

## கண்வல்லி கிழங்கு பிப்ரவரி 09,2010,15:54 IST



தாவரவியல் பெயர்: குலோரியோசா சூப்பர்பா. பொதுவான ஆங்கில பெயர்: குளோரி லில்லி. சிங்கலேரி என்ற வெரைட்டி தமிழகத்தில் மருத்துவ பயிராக பயிரிடப் படுகிறது. சிவப்பு மண், சிறந்த வடிகால்வசதி தேவை. மண்ணில் அமிலத்தன்மை 6.0-7.0 இருக்க வேண்டும். பொதுவாக கண்வல்லி கிழங்கு அதன் "வி' வடிவ கிழங்கு மூலம் நடவு செய்யப்படுகிறது. கிழங்கு அழுகலை தவிர்க்க 0.1% கார்பென்டாசிம் கலவையில் அரை மணி நேரம் விதைநேர்த்தி செய்ய வேண்டும். நடவு காலம்: ஜூன் - ஜூலை மாதங்கள். 2 முதல் 3 முறை ஆழ உழவு செய்ய வேண்டும். 30 செ.மீ. ஆழத்தில் பாத்தி அமைத்து 30-45 செ.மீ. இடைவெளியில் விதைநேர்த்தி செய்த கிழங்குகளை நடவு செய்ய வேண்டும். இது ஒரு படரும் தாவரம். எனவே செடி படருவதற்கான வகையில் இரும்பு அல்லது காய்ந்த கம்புகளை கொண்டு பந்தல் அமைக்க வேண்டும். கிழங்கு நட்டவுடன் பாசனம் செய்ய வேண்டும். பொதுவாக 5 நாள் இடைவெளியில் பாசனம் செய்வது நல்லது. தண்ணீர் கட்டி நிற்காமல் கவனிக்க வேண்டும். அடி உரமாக எக்டருக்கு 10 டன் தொழு உரம் அல்லது இயற்கை உரம் கொடுக்க வேண்டும். என்.பி.கே 120:50:75 கி/எக்டர் பரிந்துரை செய்யப்படுகிறது. எனினும் இயற்கை உரங்களை பயன்படுத்துவது சிறந்தது. காரணம் செயற்கை உரங்கள் கிழங்கு அழுகல் மற்றும் பூவில் நோய்வர காரணமாக அமைந்துவிடுகிறது. இலையின் பச்சை தன்மையை கணித்து இயற்கை உரம் இடவேண்டும். எக்டருக்கு 150 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடுவது மிக சிறந்தது. பரிந்துரை செய்யப்படும் உரத்தை 4 தடவையாக பிரித்து இடுவதால் நல்ல மகசூல் தரும்.
செயற்கை மகரந்த சேர்க்கை: இயற்கையாகவே இப்பயிர் மகரந்த சேர்க்கை செய்ய வல்லது. எனினும் செயற்கை முறையில் மகரந்த சேர்க்கை செய்வதால் அதிகமான காய்களும், காயின் அளவும் பெரியதாக இருக்க வாய்ப்பு

உள்ளது. பொதுவாக காலை 8-11 மணி வரை செயற்கை மகரந்தம் செய்வதால் நல்ல மகசூல் கிடைக்கும். (செயற்கை மகரந்த சேர்க்கையை "ஒட்டு' என சொல்வார்கள்). பொதுவாக பூச்சி தொல்லை இப்பயிருக்கு குறைவு. 15 நாட்களுக்கு ஒரு முறை வேப்பம் சாறு கலவை தெளிப்பது சிறந்தது. டைகுளோர்வாஸ் 2 மிலி/லி தெளிக்கலாம். இது பறக்கும் பூச்சிகளை அழிக்க வல்லது. பொதுவாக கிழங்கு அழுகல் வருவது இயல்பு. இதை கட்டுப் படுத்த 2கி சிஓசி/லிட் என்ற வகையில் கலந்து பாசன நீரில் செலுத்தவும். இலை மற்றும் பூவில் ஏற்படும் நோய்கள் கால தட்பவெப்ப நிலையை பொறுத்தது. இதை கட்டுப்படுத்த தக்க வேளாண்மை ஆலோசனை பெறவும், வேப்பம் புண்ணாக்கு அடியுரமாக இடுவது கிழங்கு அழுகலை கட்டுப்படுத்துவதோடு மற்ற நோய்களையும் கட்டுப்படுத்த வல்லது. சூடோமோனாஸ் என்கிற உயிரணுக்களை எக்டருக்கு 5 கிலோ என்ற அளவில் பயன்படுத்தினால் அது மண்ணில் நோய் தடுப்பானாக செயல்பட்டு கண்வல்லி கிழங்கை நோய்களிலிருந்து காப்பாற்றும். கிரீன் ஹவுசில் சாகுபடி செய்வ தால் நோயை கட்டுப்படுத்துவதோடு அதிக மகசூல் பெறலாம். 160-180 நாட்களில் இது அறுவடைக்கு வந்துவிடும். இதன் விதைகள் மற்றும் கிழங்கு மருத்துவ குணம் கொண்டது. 200-300 கி/எக்டர் விதையும், கிழங்கு 300-450 கி/எக்டர் குறைந்தபட்ச விளைச்சல் தரும்.

முக்கிய குறிப்பு: கிழங்கில் உள்ள கோல்சின்ஸ் என்ற ரசாயன பொருள் உயிர்காக்கும் நிவாரணியாக பயன்படுகிறது. கேன்சர் போன்ற கொடிய நோய்களிலிருந்து மனிதர்களை காக்க இதிலிருந்து தயாரிக்கும் மருந்து பயன்படுகிறது. இது ஒரு மருத்துவ பயிர். இப்பயிரின் எல்லா பாகங்களும் விஷ தன்மை கொண்டது.

இந்தியாவில் மேற்கு வங்காளம், தமிழ்நாடு, ஆந்திரபிரதேசம் போன்ற பகுதிகளில் இது பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில் மூலனூர், அலங்கியம், வேடசந்தூர் ஆகிய பகுதிகளில் அதிகமாக பயிரிடப்படுகிறது.

இடைத்தரகர்கள் மூலம் விற்பனை செய்யாமல் விவசாயிகள் தாங்களாகவே குழுக்கள் அமைத்து நேரிடையாக ஏற்றுமதி செய்தால் நல்ல லாபம் பெறலாம். ஐரோப்பா நாடுகளில் குறிப்பாக பிரான்ஸ், இத்தாலி நாடுகளில் இயங்கும் பன்னாட்டு மருத்துவ கம்பெனிகள் கண்வல்லி கிழங்கை கொள்முதல் செய்துகொள்கிறார்கள்.

-எம்.ஏ.கபீர், பி.எஸ்சி(அக்ரி), எம்.பி.ஏ.,
தாராபுரம், 95004 48077.

### நவீன தொழில்நுட்பம் பிப்ரவரி 09,2010,15:55 IST



பருத்தி பயிர் பாதுகாப்பு

பருத்தி பயிர் பாதுகாப்பு: பருத்தி பயிர் ரகங்களை உலகளவில் 1326 பூச்சிகள் தாக்கி மகசூலை குறைக்கின்றன. நமது நாட்டில் மட்டும் 162 பூச்சி இனங்கள் பருத்தியைத் தாக்கி சேதம் விளைவிக்கின்றன. சுற்றுப்புற சூழலை மாசுபடுத்தாத இயற்கை வழியில் பயிர் பாதுகாப்பு முறைகளை கடைபிடிப்பது அவசியமாகிறது. பருத்திக்கு பின்னர் தொடர்ந்து பருத்தி பயிரிடுவதை தவிர்க்க வேண்டும். மறுதாம்பு கட்டைப்பயிர் விடக்கூடாது. ஒரு பகுதியில் ஒரு ஆண்டிற்கு ஒரு தடவை மட்டும் பருத்தி பயிர் செய்ய வேண்டும். இரு தடவை பயிரிட்டால் தண்டு கூன்வண்டு,

காய்ப்புழுக்கள் தாக்குதல் அதிகமாகும். இயன்றவரை பூச்சிநோய் தாங்கி வளரக்கூடிய ரகங்களைத் தேர்ந்தெடுத்து பயிரிட வேண்டும். தத்துப் பூச்சி தாக்குதலுக்கு எஸ்.வி. பி.ஆர்.2 மற்றும் கே.சி.2 ரகமும், வெள்ளை ஈக்கு சுப்பிரியா, காஞ்சனா ரகங்களும், காய்ப்புழு தாக்குதலுக்கு அவாதித்தா ரகமும், வெர்டிசீலியம் வாடல் நோய்க்கு எதிர்ப்புத் திறன் கொண்ட எம்.சி.யு.5 விடி ரகமும் சிறந்ததாகும்.

சாணிப்பால் கொண்டு விதைநேர்த்தி செய்து நிழலில் உலர்த்த வேண்டும். பின் விதைப்பதற்கு சற்று முன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் புளோரசன்ஸ் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்ய வேண்டும். காற்றடிக்கும் திசைக்கு குறுக்காக பயிர்கள் / வரிசைகள் அமைத்து விதைத் தால் மருந்தடிக்கும்போது மருந்துக்கலவை வீணாகாமல் தடுக்க உதவும்.

பூச்சிக்கட்டுப்பாட்டுக்கு ஊடுபயிர்கள்: ஒவ்வொரு வயலைச் (ஒவ்வொரு அரை ஏக்கருக்கும்) சுற்றிலும் நாற்று சோளம் ஒரு அடி அகலத் திற்கு விதைத்து சுவர்போல் வளர்த்து காற்றில் மிதந்துவரும் மாவுப்பூச்சி, இலைப் பேன், தத்துப்பூச்சி, காய்ப் புழு அந்துகள் வயலினுள் நுழைவதைத் தடுக்கலாம். ஊடுபயிராக மக்காச் சோளம், உளுந்து மற்றும் சீனி அவரை (கொத்தவரை), ஓரப்பயிராக ஆமணக்கு, சூரியகாந்தி பயிரிட வேண்டும். வாய்க்கால் கள் மற்றும் பாத்தி வரப்புகளின் ஓரங்களில் தட்டைப்பயறு வளர்த்தால், பொரி வண்டுகள் பெருக்கத் திற்கு துணைபுரியும். இரட்டை வரிசையில் பருத்தியை பயிரிட்டு இடைவெளியில் ஒரு வரிசை உளுந்து அல்லது சீனி அவரை பயிரிட வேண்டும். உளுந்து ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி தாக்குதல் குறையும். சீனிஅவரை ஊடுபயிராக பயிரிட்டால் தத்துப்பூச்சி மற்றும் காய்ப்புழு தாக்குதல் குறையும். வயலைச்சுற்றி ஆமணக்கு பயிரிட்டு புரடீனியா புழு முட்டைகளை சேகரித்து அழிக்கலாம். வெண்டைபயிரிட்டு சொத்தைக் காய்களைப் பறித்து அகற்ற வேண்டும். வயலைச் சுற்றிலும் உள்ள செடிகள் மற்றும் களைகளை அகற்றி சுத்தமாக வைக்க வேண்டும். தொழு உரம் மற்றும் வேப்பம் புண்ணாக்கு இடுவது பூச்சி மற்றும் நோய் தாக்குதலை குறைக்கும் (வேர் அழுகல், வாடல், நூற்புழு, தண்டுக்கூன்வண்டு, வேர்ப்புழு). விதைத்த 30வது நாளில் டிரைகோடெர்மா விரிடி அல்லது சூடோமோனாஸ் புளோரசன்ஸ் (ஏக்கருக்கு ஒரு கிலோ) இடுவது வேரழுகல் மற்றும் வாடல் நோய் தாக்குதலைக் குறைக்கும். நட்ட 20 மற்றும் 30வது நாள் வேப்பெண்ணெய் ஒரு சதக் கரைசல் தூரில் ஊற்றுவதால் தண்டுக்கூன்வண்டு தாக்குதலை குறைக்கும்.

(தகவல்: ந.முருகேசன், ரா.விமலா, அ.ராமலிங்கம், பருத்தி ஆராய்ச்சி நிலையம், ஸ்ரீவில்லிபுத்தூர்).

விவசாய மகளிருக்கான மினி அரவை இயந்திரம் பிப்ரவரி 09,2010,15:57 IST



விவசாய மகளிருக்கான மினி அரவை இயந்திரம் கோவை கணபதியைச் சேர்ந்த விவேகானந்தனால் (94437 21341) உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு உதவியாக சென்னையைச் சேர்ந்த வில்குரோ இன்னோவேசன்ஸ் உள்ளது. மினி அரவை இயந்திரம் வாசனை திரவியப் பொருட்களான மிளகாய், கொத்தமல்லி மற்றும் கோழி தீவனம், மாட்டு தீவனம், மூலிகைகள் இவைகளை அரைக்கக்கூடியதாக உள்ளது. இந்த இயந்திரமானது ஒரு குதிரை சக்தியால் உருவாக்கப்பட்டுள்ளது.

பொதுவாக கிராமங்களில் மின்சாரமான மூன்று பேஸ்களில் கிடைப்பது அரிதாக உள்ளது. மற்றும் மின் அழுத்த குறைபாடுகள் உள்ளன. எனவே இந்த மினி அரவை இயந்திரம் விவசாய பெண்மணிகளுக்கு எடை குறைவாகவும் எளிதில் உபயோகப்படுத்தும் திறன் உள்ளதாகவும் உள்ளது. இந்த இயந்திரத்தின் உதிரி பாகங்களான பேரிங்குகள், பிளேடுகள் எளிதில் கிடைக்கக் கூடியதாகவும், வாங்கக் கூடியதாகவும் உள்ளன. இந்த மினி இயந்திரத்தின் விலை 11 ஆயிரத்து 500 ரூபாய் (மோட்டாருடன்). ஒரு குதிரைத்திறன் மோட்டாரின் விலை 5,300 ரூபாய். இரண்டு குதிரைத்திறன் மோட்டாரின் விலை 6,000 ரூபாய். மோட்டார் இல்லாமல் இயந்திரத்தின் விலை 6,500 ரூபாய்.
-கே.சத்தியபிரபா, 4/164, எஸ்.எஸ்.காலனி, உடுமலை.

தினகரன்

**விவசாயிகளின் கோரிக்கை ஏற்பு பி.டி. கத்தரிக்காய் வராது**

பதிவு செய்த நாள் 2/10/2010 12:10:56 AM



புதுடெல்லி: மரபணு மாற்றப்பட்ட பி.டி. கத்தரிக்காயால் உடல் நலனுக்கும் சுற்றுச் சூழலுக்கு ஆபத்து இல்லை என்பது நிரூபிக்கப்படும் வரை, அதை பயிரிட அனுமதி கிடையாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. காய்கறிகளில் முக்கிய இடம் வகிக்கும் கத்தரிக்காயின் மரபணுவில் மாற்றம் செய்து புதிய வகை கத்தரிக்காயை உயிரி தொழில்நுட்ப விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இது பி.டி.கத் தரிக்காய் என்று அழைக்கப்படுகிறது. இந்த கத்தரிக்காயை வர்த்தக ரீதியில் பயிரிடவும் பயன் படுத்தவும் மத்திய உயிரி தொழில்நுட்ப பொறியியல் அங்கீகாரக் குழு ஏற்கனவே அனுமதி அளித்தது. முழுமையாக ஆய்வு செய்யும் முன்பே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக குழு உறுப்பினர்களில் ஒருவரான புஷ்பா பார்கவா கூறியதைத் தொடர்ந்து சர்ச்சை ஏற்பட்டது. பி.டி.கத்தரிக்காயின் தோல் பகுதி கடினமாக இருக்கும் வகையில் மரபணு மாற்றம் செய்யப்பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால், கத்தரிக்காயை புழு தாக்காமல் இருப்பதோடு நீண்ட நாட்களுக்கு அழுகாமல் இருக்கும். புழு தாக்காததால் கத்தரிக்காய் விளைச்சல் அதிகரித்து விவசாயிகளுக்கும் லாபம் கிடைக்கும் என்று கூறப்பட்டது. ஆனால், மரபணு மாற்றம் செய்யப்படுவதால் பி.டி.கத்தரிக்காயில் உள்ள விஷத்தன்மை புற்றுநோய் உட்பட பல நோய்களுக்கு காரணமாகிவிடும் என்று நிபுணர்கள் எச்சரித்தனர். சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதோடு விவசாய நிலங்கள் பாழாகிவிடும் என்றும் எச்சரித்தனர். இதனால், பி.டி. கத் தரிக்காய்க்கு பொதுமக்கள், விவசாயிகள், சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

கருத்து கேட்பு: பெங்களூர் உட்பட 7 நகரங்களில் விவசாயிகள், பொதுமக்களிடம் மத்திய சுற்றுச் சூழல் அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் கருத்து கேட்டார். ஐதராபாத், பெங்களூர் நகரங்களில் ஜெய்ராம் ரமேஷை விவசாயிகள் முற்றுகையிட்டு பி.டி.கத்தரிக்காய்க்கு எதிர்ப்பு தெரிவித்தனர். மக்கள் உணர்வுகளுக்கு ஏற்ப, பி.டி. கத்தரிக்காயை அனுமதிப்பது பற்றி 10ம் தேதி (இன்று) முடிவு அறிவிக்கப்படும் என்று ஜெய்ராம் ரமேஷ் கூறியிருந்தார். ஆனால், அரசின் முடிவை நேற்றே அவர் அறிவித்தார்.

இது தொடர்பாக டெல்லியில் ஜெய்ராம் ரமேஷ் கூறியதாவது:

பி.டி.கத்தரிக்காய்க்கு அனுமதி அளிப்பது பற்றி விஞ்ஞானிகள், விவசாயிகளிடம் ஒருமித்த க ருத்து ஏற்படவில்லை. பி.டி. கத்தரிக்காய்க்கு எதிரான உணர்வு மக்களிடம் நிலவுகிறது. மக்களின் உணர்வுக்கு மதிப்பளித்து முடிவு எடுக்க வேண்டியது எனது கடமை.

பி.டி.கத்தரிக்காயால் உடல் நலனுக்கு ஆபத்து இல்லை என்று நிரூபிக்கப்படும் வரை அதை பயிரிட அனுமதி இல்லை. விவசாயிகள், விஞ்ஞானிகள், பொதுமக்கள் ஆகியோரின் கருத்து களின் அடிப்படையில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனினும், பி.டி.கத்தரிக்காய் தொடர்பான ஆராய்ச்சிகள் தொடரும்.

வர்த்தக ரீதியில் பயிரிட அனுமதி இல்லை என்ற முடிவு பி.டி. கத்தரிக்காய்க்கு மட்டுமே பொருந்தும். எதிர்காலத்தில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட வெண்டைக்காய், முட்டைகோஸ் போன்றவற்றை பயிரிடுவதற்கு இந்த தடை பொருந்தாது.

பி.டி.கத்தரிக்காய் விவகாரம் குறித்து நாடாளுமன்றத்திலும் தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டத் திலும் விரிவாக விவாதிக்கப்பட வேண்டும். பி.டி. கத்தரிக்காயை எப்படியும் கொண்டு வந்து விட வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. இது தொடர்பாக மரபணு மாற்றம் செய்யும் நிறுவனங்களின் பிரதிநிதிகளை நான் சந்திக்கவும் இல்லை. என் மனசாட்சி தெளிவாக உள்ளது.

இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.

தினத் தந்தி DAILY THANTHI

**புற்றுநோய் ஏற்படும் என்று பல்வேறு தரப்பினர் எச்சரிக்கை 11 மாநிலங்கள் எதிர்ப்பு எதிரொலி**
**மரபணு கத்தரிக்காய்க்கு அனுமதி இல்லை**
**மத்திய அரசு அறிவிப்பு**
**மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை பயிர் செய்ய இந்தியாவில் தற்போதைக்கு அனுமதி கிடையாது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.**

புதுடெல்லி, பிப்.10–

உயிரி தொழில் நுட்பம் (பயோ டெக்னாலஜி) அடிப்படையில் மரபணு மாற்றம் செய்யப்பட்ட புதிய உணவு பயிர்கள், உலகின் பல்வேறு பகுதிகளில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன.

பி.டி. கத்தரிக்காய் என்று அழைக்கப்படும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை இந்தியாவில் பயிரிடுவது பற்றி ஆய்வு செய்வதற்காக நிபுணர் குழு அமைக்கப்பட்டு இருந்தது.

நாடு முழுவதும் எதிர்ப்பு

இந்த குழு, கடந்த அக்டோபர் மாதம் தனது அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்தது. மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் கீழ் செயல்படும் மரபணு பொறியியல் அங்கீகார குழு (ஜி.இ.ஏ.சி.), நிபுணர் குழுவின் அறிக்கையை பரிசீலித்து, அதில் குறிப்பிடப்பட்டு இருந்த பரிந்துரைகளை ஏற்றுக் கொண்டது. பி.டி. கத்தரிக்காய், இந்தியாவின் சுற்றுச்சூழலுக்கு உகந்தது என்று அந்த குழு முடிவு எடுத்தது.

பி.டி. கத்தரிக்காய் பூச்சிகளால் அதிகம் பாதிக்கப்படுவது இல்லை என்றும், அதிக மகசூலை தருவதாகவும் ஒரு கருத்து நிலவுகிறது. ஆனால், பி.டி.கத்தரிக்காயின் மரபணு விஷத்தன்மை கொண்டது என்றும், இதன்மூலம் நமது பாரம்பரிய காய்கறிகளும் நாளடைவில் அழிந்துவிடும் இந்த கத்தரிக்காயை சாப்பிட்டால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளது என்றும் எதிர்ப்பாளர்கள் கூறி வருகிறார்கள். மேலும் நாடு முழுவதும் விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் தரப்பில் இருந்தும் பி.டி. கத்தரிக்காய்க்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது.

ஆலோசனை கூட்டம்

அதைத் தொடர்ந்து, இந்த விவகாரத்தில் அவசரப்பட்டு மத்திய அரசு எந்த முடிவையும் எடுக்காது என்று, மத்திய சுற்றுச்சூழல் துறை மந்திரி ஜெய்ராம் ரமேஷ் உறுதி அளித்து இருந்தார். நாடு முழுவதிலும் உள்ள 7 முக்கிய நகரங்களில் இது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் மந்திரி ஜெய்ராம் ரமேஷ் கலந்து கொண்டு, அனைத்து தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டு அறிந்தார். இந்த கூட்டங்களில் பி.டி.கத்தரிக்காய்க்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

பல கூட்டங்களில் பெரும் அமளியும் ஏற்பட்டது. ஆந்திரா உள்ளிட்ட 11 மாநில அரசுகளும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து இருந்தன. 9 மாநிலங்களில் பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதிக்கப்பட்டு உள்ளன. இந்த நிலையில், மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ், பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக பயிரிடுவதற்கு அனுமதி வழங்குவது பற்றிய மத்திய அரசின் முடிவு 10–ந் தேதி அன்று அறிவிக்கப்படும் என்று அறிவித்து இருந்தார்.

மத்திய அரசு அனுமதி மறுப்பு

ஆனால், இந்த பிரச்சினையில் ஒரு நாள் முன்னதாக மத்திய அரசின் முடிவு நேற்றே அறிவிக்கப்பட்டது. பி.டி. கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக பயிரிடுவதற்கு அனுமதி இல்லை என்று, மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ் அறிவித்தார். இதுதொடர்பாக நேற்று அவர் அளித்த பேட்டியின்போது கூறியதாவது:–

"பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி வழங்குவதில், விஞ்ஞானிகள், விவசாயிகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறையினர் இடையே தெளிவான ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இந்த பிரச்சினையில் மேலும் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். எனவே இதில் அளவுக்கு அதிகமான அவசரம் காட்ட

வேண்டிய அவசியம் இல்லை.
பாராளுமன்றத்தில் விவாதம்
மக்களின் மன உணர்வுகள் எதிராக இருக்கும் நிலையில், முன் எச்சரிக்கையுடன், மிகவும் கவனமாக, கொள்கை அடிப்படையிலான அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டியது எனது கடமையாகும். மனிதர்களின் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு, இதுபோன்ற பயிர்கள் பாதுகாப்புக்கு உகந்ததுதானா என்று சுதந்திரமான விஞ்ஞான ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்படும் வரை, எந்த ஒரு முடிவையும் அமல்படுத்த மாட்டோம்.
அறிவியல் ரீதியாகவும், மக்கள் மத்தியில் இருந்தும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் அடிப்படையிலும், கடந்த மாதம் நடைபெற்ற இந்திய அறிவியல் மாநாட்டில் பேசிய பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்த கருத்துகளையும் கவனத்தில் கொண்டு இந்த முடிவை எடுத்து இருக்கிறேன். ஜனநாயக முறையில், வெளிப்படையாக உரிய காரணங்களுடன் எனது முடிவை மக்களிடம் வெளியிடுகிறேன். பாராளுமன்றம் மற்றும் தேசிய வளர்ச்சி கவுன்சில் கூட்டங்களில் இதுபற்றி விரிவாக விவாதிக்க வேண்டும் என்று கருதுகிறேன்".இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் கூறினார்.
கத்தரிக்காய்க்கு மட்டுமே
"இன்று அறிவிக்கப்படும் முடிவு பி.டி.கத்தரிக்காய்க்கு மட்டுமே பொருந்தும். வருங்காலங்களில் வரக்கூடிய வெண்டைக்காய், முட்டைக்கோஸ், நெல் போன்ற மரபணு மாற்ற பயிர்களுக்கு இது பொருந்தாது" என்றும் அவர் தெளிவு படுத்தினார்.
கேள்வி ஒன்றுக்கு பதில் அளித்த அவர், "நான் வர்த்தக மந்திரியாக பொறுப்பு வகித்தபோது, மரபணு மாற்றம் செய்யப்பட்ட பயிர்கள் தொடர்பான கம்பெனி பிரதிநிதிகளை சந்தித்து இருந்தாலும், கடந்த ஆண்டு மே மாதம் 29–ந் தேதி அன்று மத்திய சுற்றுச் சூழல் துறை பொறுப்பை ஏற்றபிறகு அவர்களில் யாரையும் சந்திக்கவில்லை" என்று குறிப்பிட்டார்.
ஜெய்ராம் ரமேஷ் மீது குற்றச்சாட்டு
கொல்கத்தா, பெங்களூர் ஆகிய இடங்களில் நடைபெற்ற ஆலோசனை கூட்டங்களின்போது, மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷுக்கு கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பி.டி.கத்தரிக்காய் ரகத்தை அறிமுகம் செய்யும் 'மான்சாண்டோ' நிறுவனத்தின் ஏஜெண்டாக அவர் செயல்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. மேலும் மத்திய மந்திரிசபையிலும், இந்த விவகாரத்தில் ஒருமித்த கருத்து ஏற்படவில்லை.
அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறை மந்திரி பிரிதிவிராஜ் சவான், விவசாயம் மற்றும் உணவு மந்திரி சரத்பவார் ஆகியோர், பி.டி.கத்தரிக்காயை வர்த்தக ரீதியாக பயிரிடுவதற்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். "பொறியியல் அங்கீகார குழு பி.டி. கத்தரிக்காய்க்கு ஒப்புதல் வழங்கியபிறகு இதில் மத்திய அரசு தலையிட வேண்டியது இல்லை" என்று சரத்பவார் கருத்து தெரிவித்து இருந்தார். இதற்கு பதிலடி கொடுத்த ஜெய்ராம் ரமேஷ், இறுதி ஒப்புதல் அளிக்க வேண்டியது தனது அமைச்சகரகம்தான் (சுற்றுச்சூழல் பாதுகாப்பு) என்றார்.

## பி.டி. கத்தரிக்காய்க்கு தடை: நிபுணர்கள் வரவேற்பு

புதுடெல்லி,பிப்.10–
பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதித்து மத்திய அரசு எடுத்த முடிவுக்கு வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் உள்ளிட்ட நிபுணர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.
எம்.எஸ்.சுவாமிநாதன்
பி.டி. கத்தரிக்காய் எனப்படும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட கத்தரிக்காயை பயிரிட இப்போதைக்கு அனுமதி இல்லை என்று மத்திய அரசு நேற்று அறிவித்தது.
மத்திய அரசின் இந்த முடிவுக்கு பல்வேறு நிபுணர்கள் வரவேற்பு தெரிவித்துள்ளனர். இதுகுறித்து வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கூறியதாவது:–
பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதித்தது, புத்திசாலித்தனமான முடிவு. இந்த கத்தரிக்காயை பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து கவனமாக ஆய்வு செய்வது அவசியம். இதுதொடர்பாக ஆய்வுகள் நடத்த, நம்பகத்தன்மையான, ஒளிவுமறைவற்ற அமைப்பை உருவாக்க வேண்டும். இந்த கால அவகாசத்தை மத்திய மந்திரி ஜெய்ராம் ரமேஷ் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஆய்வு முடிவுகளை பொதுமக்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும். அதே சமயத்தில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட மற்ற விளைபொருட்களில் சில நன்மைகளும் உள்ளன. அவற்றை நாம் எப்படி பயன்படுத்துகிறோம் என்பதில்தான் விஷயம் இருக்கிறது. எனவே, ஒட்டுமொத்தமாக எல்லா மரபணு மாற்றம் செய்யப்பட்ட விளைபொருட்களுக்கும் தடை விதித்து விடக்கூடாது. ஒவ்வொரு விளைபொருளையும் தனித்தனியாக ஆய்வு செய்து முடிவு எடுக்க வேண்டும்.
இவ்வாறு எம்.எஸ்.சுவாமிநாதன் கூறினார்.
மரபணு மாற்றம் செய்யப்பட்ட விளைபொருட்களுக்கு எதிரான அரசு சார்பற்ற அமைப்பின் உறுப்பினர் கவிதா குருங்காட்டியும், மத்திய அரசின் முடிவை வரவேற்றுள்ளார். அதே சமயத்தில், மரபணு மாற்றம் செய்யப்பட்ட அரிசி உள்ளிட்ட விளைபொருட்கள் மீதும் மத்திய அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பி.டி. கத்தரிக்காயின் பாதிப்பு குறித்து, அதை குரங்குகள் உள்ளிட்ட விலங்குகளின் மீது பயன்படுத்தி ஆய்வு செய்யப்படும் என்று மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் மரபணு பொறியியல் ஒப்புதல் கமிட்டி தலைவர் பி.எம்.பார்கவா கூறியுள்ளார்.

காங்கிரஸ் கருத்து

பி.டி. கத்தரிக்காய்க்கு தடை குறித்து காங்கிரஸ் செய்தித்தொடர்பாளர் ஷகீல் அகமது கூறியதாவது:–

பி.டி. கத்தரிக்காய்க்கு தடை விதித்தது, சரியா, தவறா என்று நாங்கள் கருத்து கூற முடியாது. விஞ்ஞானிகள், வேளாண் நிபுணர்கள் உள்பட அனைத்து தரப்பினருடனும் ஆலோசித்த பிறகே, இம்முடிவை மத்திய அரசு எடுத்துள்ளது. அரசின் முடிவை ஆதரிக்கிறோம். மக்களின் ஆரோக்கியம்தான் எல்லா அரசுக்கும் முக்கியம்.

இவ்வாறு அவர் கூறினார்.

பா.ஜனதா

பா.ஜனதா செய்தித்தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத் கூறியதாவது:–

இது உணர்வுபூர்வமான பிரச்சினை. விவசாயிகள், நுகர்வோர், சுகாதாரம், உணவு பாதுகாப்பு ஆகியவற்றின் மீது நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியது. ஆகவே, இதில் அவசரப்பட்டு முடிவு எடுக்கக்கூடாது. உலக நாடுகளின் நிர்பந்தத்துக்கு பணிந்தது போன்ற தோற்றத்தை அளிக்கக்கூடிய எந்த முடிவையும் எடுக்கக்கூடாது.

இவ்வாறு அவர் கூறினார்.